பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 27 சனிக்கிழமை 07.05.2022 கதிர் 183

**இனி இது ரகசியம் அல்ல!**

பொலிஸ்துறைக்குப்பொறுப்பான பொதுப் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வீடும் நேற்றுப் பொதுமக்களின் முற்றுகைக்கு உள்ளாகியது. அதன் பின்னரே அவசரகால நிலைப் பிரகடனம், போராட்டக் காரர்களை மாற்று ☞2

# அவசரகால நிலைமை நேற்றிரவு பிரகடனம்!

## மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கத் தீர்மானம்?

கொழும்பு, மே 07

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரத் தக்கதாக நாட்டில் அவசரகால நிலையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரகடனப்படுத்தி இருக்கிறார்.

பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இது தொடர்பில் ஜனாதிபதி விடுத்துள்ள அறிவித்தல் உள்ளடங்கிய விசேட வர்த்தமானி நேற்று இரவு வெளியாக இருந்தது. ☞2

## நாடாளுமன்ற நுழைவு வீதி ஆர்ப்பாட்டம் இடைநிறுத்தம்



நாடாளுமன்ற நுழைவு வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்த பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் தனது ☞12

## படைகளை மக்கள் மீது அரசு ஏவப் போகின்றது!

### கஜேந்திரகுமார் நேரத்துடன் எச்சரிக்கை



கொழும்பு,மே 07

நாட்டு மக்களின் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதியும் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கமும்பதவிவிலகாதநிலையில் கலவரம் வெடிக்குமாயின் மக்களின் குரலுக்குச் செவிசாய்க்காத அரசாங்கம் இராணுவத்தையே பயன்படுத்தும் ☞12

## 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு 4ஆவது தடுப்பூசி திங்கள் முதல்

இலங்கையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நான்காவது கொவிட் தடுப்பூசி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான நான்காவது கொவிட் தடுப்பூசியை வழங்க, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழகம் செல்ல முயன்ற இருவர் இடையில் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மே.07

இலங்கையில் இருந்து தமிழகத்துக்குத் தப்பிச் சென்ற இருவரை இந்தியா எனக்கூறி நடுக் கடலில் இலங்கைப் பக்கத்து மணல்திட்டில் இறக்கி விடப்பட்ட நிலமையில் அவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னாரில் இருந்து தமிழகத்திற்கு அகதிகளாகச் ☞12

# பிரதமர் திங்கள் பதவி துறப்பார்



கொழும்பு, மே 07

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவி விலகுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்த. நாளை மறுதினம் திங்கட்கிழமை பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ☞2

## பிரதி சபாநாயகர் பதவிக்கு மீண்டும் தெரிவாகிய கையோடு அதைத் துறக்கிறார் சியம்பலாப்பிட்டிய



பிரதி சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்ட, நாடாளுமன்றஉறுப்பினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய அப்பதவியை மீண்டும் இராஜினாமா செய்வதற்குத் தீர்மானித்துள்ளார் என்று அறிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான 'பதவி துறப்பு' கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேற்று அவர் அனுப்பி வைத்துள்ளார்.

பிரதி சபாநாயகர் பதவியை இராஜினாமாச்செய்து, அப்பதவிக்கே மீண்டும் தெரிவாகி, 24 மணிநேரத்துக்குள் மீண்டுமொரு முறை இராஜினாமா செய்யும் முடிவை அவர் ☞2

## நம்பிக்கையில்லாப் பிரேரணைகள்; நாளை கட்சித் தலைவர்கள் கூடி முடிவு

ஐக்கிய மக்கள் சக்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் மீதான விவாதம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை கட்சித்தலைவர்கள் கூட்டத்திற்கு சபாநாயகர் அழைப்பு விடுத்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக நாடாளுமன்றத்திற்கு வெளியே எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல் நடாத்தி கலைத்தமையை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்தமையை அடுத்து சபாநாயகர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எதிர்ப்பையடுத்து சபை பத்து நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போது, 'இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபரிடம் அறிக்கை கோரியுள்ளேன். மேலும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் ☞2

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்; சுட்டாலும் செய்வாராம் சிவாஜி!



துப்பாக்கியால் சுட்டாலும் பரவாயில்லை, முள்ளிவாய்க்கால் நினைவு அஞ்சலியை நிச்சயம் செய்வேன் என்று கூறியிருக்கின்றார் தமிழ் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழிகளில் கையாளுதல் போன்ற தீர்மானங்கள் எல்லாம் எட்டப்பட்டன என்று கூறப்படுகின்றது. குருவி இருக்கப் பனம் பழம் விழுந்த கதைதான் இது.

நேற்று மாலை நடைபெற்றது விசேட அமைச்சரவைக் கூட்டம் என்று சில ஊடகங்கள் தெரிவித்திருந்தன. அப்படியல்ல. அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் தனிப்பட்ட ஒரு கூட்டமாகவே அது நடைபெற்றது. ஆக, அது உத்தியோகபூர்வமான அமைச்சரவைக் கூட்டம் அல்ல.

அந்தக் கூட்டத்தின் இடையே, இடைக்கால அரசு ஒன்றை அமைப்பதற்கு வசதியாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்டது என்றும், மேலும் சில அமைச்சர்கள் அந்தக் கோரிக்கையை வரவேற்றனர் என்றும் தெரிகின்றது.

ஜனாதிபதியின் கோரிக்கையை சிரித்துக்கொண்டுபிரதமர்தலையைசைத்து ஏற்றுக் கொண்டார் என சில வட்டாரங்கள் குறிப்பிட்டன.

ஆனால் பிரதமர் தரப்பில் வேறு சில வட்டாரங்கள் அந்தத் தலையசைப்புக்கு வித்தியாசமான விளக்கங்கள் முன் வைக்கின்றன. உத்தியோகபூர்வ அமைச்சரவைக் கூட்டத்தில் அத்தகைய கோரிக்கையை ஜனாதிபதி முன் வைத்திருந்தால் அதனை அவரது உத்தியோகபூர்வ வழிகாட்டலாக ஏற்று பிரதமர் பதவி விலக வேண்டியவராக இருந்திருப்பார். அல்லது பதவி விலகும்படி பிரதமரை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக எழுத்தில் கோரியிருந்தாலும் அக்கோரிக்கையை ஏற்றுப் பிரதமர் செயற்பட்டிருப்பார். அப்படி இல்லாமல், உத்தியோகப்பற்றற்ற ஒரு கூட்டத்தில், உத்தியோகப்பற்றற்ற முறையில், ஜனாதிபதி கூறிய விடயத்தை உத்தியோகபூர்வமான உத்தரவாக ஏற்று ஒழுக வேண்டிய கடப்பாடு பிரதமருக்கு இல்லை. ஆகவே ஜனாதிபதியின் உத்தியோகபூர்வமான கோரிக்கை வரும் வரை பிரதமர் பதவி விலக மாட்டார் என்று அவருக்கு நெருக்கமான ஒரு வட்டாரம் தெரிவித்தது. அதேபோன்ற கருத்து ஒன்றைபிரதமரின்ஊடகச்செயலாளரும் நேற்றிரவு கோடி காட்டினார். ஆனால் அவர், பிரதமரை பதவி விலகச் சொல்லி ஜனாதிபதி கோரவே இல்லை என்று மறுத்திருந்தார். பிரதமருக்கான ஜனாதிபதியின் நேற்றைய கோரிக்கை உத்தியோகபூர்வமானதாக இல்லை என்ற அடிப்படையில் இந்த விளக்கத்தை அவர் தந்து இருக்கக்கூடும்.

எது, எப்படி என்றாலும் இப்போதைய நிலையில் பெரும்பாலும் திங்கட்கிழமை – நாளை மறுதினம் – பிரதமர் தனது பதவியைத் துறப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி, இப்போது நடக்கும் போராட்டங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்குவதற்கு ஜனாதிபதி தயாராகும் சூழ்நிலையில், அத்தகைய நெருக்கடிகரமான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்கும் அரசாங்கத்தின் தலைவராக இருப்பதற்கு பிரதமர் விரும்பமாட்டார்என்றும்ஒருதகவல்தெரிவித்தது. திங்களன்று நிலைமை தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

★ ★ ★

பிரதி சபாநாயகர் தெரிவின் போது தவறிழைத்து விட்டோம் என்று சு.கவினர் தங்களுக்குள் நொந்து கொண்டமை குறித்து நேற்று என் இப்பத்தியில் விலாவாரியாகக் குறிப்பிட்டிருந்தேன். அவர்கள் ஒவ்வொருவராக இந்த கருத்தியல் நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் செய்திகளை வெளியிட்டு வருகிறார்கள்.

ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று முன்தினம் காலை கிடைத்த பதவியை அடுத்த 24 மணி நேரத்துக்குள் துறந்து விடும் அளவுக்கு நேற்று முன்தினம் நான் குறிப்பிட்டபடி இந்த தேர்வு பெரும் குளறுபடிகளை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த விடயத்தை ஒட்டி ரணில் விக்கிரமசிங்க – சாணக்கியன் மோதல் நேற்று நாடாளுமன்றில் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய பதிலடி உரையோடு சூடு பிடித்திருக்கிறது. தனக்கேற்பட்ட சினத்தில் பல விடயங்களைக் குழப்பமாகக் கூறி தன்னைத் தானே கீழிறக்கி கொண்டார் ரணில் என்றுதான் கூற வேண்டும்.

நேற்று முன்தினம் சாணக்கியன் ஆற்றிய உரைக்கு நேற்று காலை ரணில் பதிலடி கொடுக்க, அதற்கான மறுத்தானை நேற்று மாலையில் சாணக்கியன் திரும்பவும் கொடுத்தார்.

தாம் முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதி அமைப்பாளர் என்பதை ஒப்புக்கொண்டு நாடாளுமன்றத்திலும் பிற இடங்களிலும் திருப்பித் திருப்பி அதைக் கூறிவருகின்றமையை சாணக்கியன் சுட்டிக்காட்டினார்.

கொலைகாரர்களுடன் இருக்க முடியாது என்பதைக் கண்டுதான் அங்கிருந்து தான் வெளியேறினார் என்பதை அவர் பல தடவைகள் நாடாளுமன்றிலும் பிற கூட்டங்களிலும் கூறியிருக்கின்றார்.

ஆனால் தமது பட்டிருப்பு தொகுதி நியமனத்துக்கான பழைய ஆவணங்களை ரணில் உடனடியாகவே பெற்று, நாடாளுமன்றத்தில் நேற்று தமது உரையினிடையே சமர்ப்பித்தார். இது அவருக்கும் ஆளும்தரப்புக்கும்உள்ள நெருக்கத்தை நிரூபிக்க போதுமானது என்றார் சாணக்கியன்.

1990களில் பிரேமதாஸாவின் காலத்தில், புலிகள் – அரசு சமாதான முயற்சிகள் என்ற தேனிலவு முடிந்து, யுத்தம் வெடித்த போது 600 பொலிஸாரைப் புலிகள் மடக்கிப் பிடித்தனர். பின்னர் அவர்கள் காணாமல் போயினர் என்று கோடி காட்டிய ரணில் விக்கிரமசிங்க, அது தொடர்பில் சிக்கிய பிள்ளையான் போன்றோருக்கு உதவியாக சாணக்கியன் செயல்பட்டார் என்றும் சபையில் கூறினார் என சாணக்கியன் தமது உரையில் சுட்டிக்காட்டினார்.

“அந்தப் பிரச்சினை நடந்தது 1990 இல். ஆனால் நான் 1991 இல்தான் பிறந்தேன்” – என்றார் சாணக்கியன். அச்சம்பவம் நடந்தபோது பிள்ளையானுக்கும் வயது வெறும் 14 தான் என்பதை அறியாமல் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்டு பலரின் ஏளனத்துக்கும் ஆளானார்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தோடு சேர்ந்து செயற்படுகின்றார் என்று குற்றம் சுமத்தி, அதற்கு எதிராக இன்று சனிக்கிழமை காலையில் அவரது கொள்ளுப்பிட்டி 5 ஆம் இலக்க ஒழுங்கை இல்லத்தில் முன்னால் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு மகளிர் அமைப்பு ஒன்று தயாராகி இருப்பதாகக் கூறப்படுகிறது. அதற்காக அந்த மகளிர் அமைப்பின் உறுப்பினர்களை அருகிலுள்ள மகளிர் பாடசாலை முன்றிலில் கூடுமாறு சமூக ஊடகங்கள் வாயிலாக அறிவித்தல் வெளியாகியிருந்தது. அந்த போராட்டத்தைத் தூண்டி, பின்னணியில் இருந்து செயற்படுத்துபவர்களில் சாணக்கியன் ஒருவர் என ரணில் கருத்துக் கூறி, குற்றஞ்சாட்டியமை எல்லாவற்றிலும் பெரும் வேடிக்கையாகும். அந்தக் குற்றச்சாட்டை சாணக்கியன் நேற்றைய தமது உரையில் மறுத்தார்.

இந்த விடயத்தை உற்று நோக்கிய சக பத்திரிகையாளர் ஒருவர் ஒரு கருத்தை எனக்கு வேடிக்கையாகச் சொன்னார்.

“வயது போன மாதுக்கள் கொஞ்சப் பேர் இந்தப் போராட்டத்தை நடத்தப் போகிறார்கள் போலும். ரணில் வீட்டை அவர்கள் தேர்ந்தெடுத்துப் போராடத் துணிந்தமைக்குக் காரணம் உண்டு. அவ்வளவு நம்பிக்கை அவர்களுக்கு ரணிலின் மீது. அவர்கள் பெண்கள். மாதுகள். ரணிலின் வீட்டின் முன்னால் போராடினால் வீட்டுக்குள் இருந்து தங்கள் பாதுகாப்புக்கு அச்சம் ஏதும் வராது என்ற துணிச்சல் அவர்களுக்கு” – என்றார் அவர் சிலேடையாக.

பாவம் ரணில். அவரது அரசியல் முதிர்ச்சியும் செயற்பாடும் இவ்வளவு தூரம் எள்ளி நகையாடும் நிலைமைக்குச் சென்றமை மன வருத்தம்தான்...!

– மின்னல் –

- - - - - - - - - - - - - -

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எம்.கே.சிவாஜிலிங்கம்.

தொலைக்காட்சி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

## அவசரகால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசாங்கத்துக்கு எதிராகத் தற்போது பரவலாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களை இந்த அவசரகால நிலைமையின் கீழான அதிகாரங்களைப் பயன்படுத்தி, இரும்புக் கரம் கொண்டு அடக்குவதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசு நடவடிக்கை எடுக்கக் கூடும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

காலிமுகத்திடல் போராட்டத்தை ஒரேயடியாக அடக்கிக் கலைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

ஏற்கனவே கடந்த பெப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில் இதேபோல தாம் பிரகடனப்படுத்திய அவசரகாலநிலையை ஒரு வாரத்துக்குள் ஜனாதிபதி மீளப்பெற்று அது தொடர்பான விடயம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு வராமல் தவிர்த்துக் கொண்டார் என்பது தெரிந்ததே.

அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டால் அடுத்த 14 நாள்களுக்குள் அந்த விடயம் நாடாளுமன்றத்தில் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

பெப்ரவரி முதல் வாரத்தில் அறிவிக்கப்பட்டு ஒரு வாரத்திலும் குறைந்த காலம் நடைமுறையில் இருந்த அவசரகாலச் சட்டம் மற்றும் அதன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு ஆகியவற்றுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது

- - - - - - - - - - - - - -

## நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீதான விவாதம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக திங்கட்கிழமை கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்படும்' என்று சபாநாயகர் தெரிவித்தார்.

- - - - - - - - - - - - - -

## பிரதமர் திங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கு முன்னர் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி அறிக்கை ஒன்றை அவர் வெளியிடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி தலைமையில் நேற்று மாலை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தின் போதே ஜனாதிபதியால் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் கோரிக்கைக்கு பல அமைச்சர்கள் ஆதரவு தெரிவித்தனர் எனக் கூறப்படுகின்றது.

வேறு சில அமைச்சர்கள் ஜனாதிபதியின் இந்தத் தீர்மானத்திற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை எனவும் கூறப்பட்டது.

இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது, பிரதமர் அதனை உள்வாங்கி தலையை மட்டும் அசைத்தார் எனவும், கருத்து எதையும் கூறவில்லை எனவும் கூறப்பட்டது.

## பிரதி சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எடுத்துள்ளமையானது, அரசியல் களத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் சமூகவலைத்தளங்களில் பல கோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசுடனான, ‘அரசியல் உறவை’ ஏப்ரல் 05 ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முறித்துக்கொண்டது. நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் முடிவையும் எடுத்தது.

இதனையடுத்து சுதந்திரக்கட்சி உறுப்பினரான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, பிரதி சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்தார். எனினும், அவரின் பதவி துறப்பு கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை. ஜனாதிபதி விடுத்த கோரிக்கையின் பிரகாரம் ஏப்ரல் 30 ஆம் திகதிவரை அப்பதவியில் நீடிக்க அவர் தீர்மானித்தார்.

பிரதி சபாநாயகரின் இராஜினாமாக் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்ற தகவலை மே 04ஆம் திகதியே ஜனாதிபதி, சபாநாயகருக்கு தெரியப்படுத்தினார்.

இதன்பிரகாரம் மே 05 ஆம் திகதி புதிய பிரதி சபாநாயகரை தெரிவுசெய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்டது.

இரகசிய வாக்கெடுப்பில் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கு 148 வாக்குகளும், இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு 65 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன. 3 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. 8 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கு ஆதரவு வழங்கவே பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் முடிவெடுத்திருந்தது. அவரின் பெயரை நிமல் சிறிபாலடி சில்வா முன்மொழிவதற்கும், அதனை ராஜித சேனாரத்ன வழிமொழிவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும்,ஆளுங்கட்சியானஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தமது ஆதரவை ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கு வழங்கியதால், ஐக்கிய மக்கள் சக்தி இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை களமிறக்கியது.

அரசுத் தரப்பு முன்மொழியும் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கு சஜித் அணியும் ஆதரவு வழங்கியிருந்தால், அவருக்கு எதிராக சித்தார்த்தனைக் களமிறக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டமிட்டிருந்தது. இம்தியாஸ் களமிறக்கப்பட்டமையால் அவரை ஆதரிக்க கூட்டமைப்பு முடிவெடுத்தது.

பிரதி சபாநாயகருக்கு, ஆளுங்கட்சி ஆதரவு வழங்கியமை பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளது. எதிரணியினரும் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே பதவி துறக்கும் முடிவை ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய எடுத்துள்ளார். அதற்கான காரணங்களை பட்டியலிட்டு ஜனாதிபதிக்கு கடிதமும் அனுப்பியுள்ளார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சிகிச்சை - நோய்க்கா? குணங்குறிக்கா?

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

– என்றான் திருநாப்போதகன் வள்ளுவப் பொருந்தகை.

நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும் – என்பது இக்குறளுக்குப் பொருள்.

இது உடல் நோய்க்கான மருத்துவத்துக்கு மட்டுமல்ல, சமுதாய நோய்க்கான – பிணிக்கான – சிகிச்சை முறைமையும் கூட இதுதான்.

இன்று இலங்கை நாடு எதிர்கொள்ளும் மோசமான பொருளாதார நெருக்கடி எனும் சமுதாயப் பிணிக்கும் கூட இந்த சிகிச்சை முறைதான் பொருத்தமானது.

இலங்கையின் மோசமான பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு வேண்டி – சுகம் நாடி – இலங்கை மக்கள் வீதிக்கு வந்திருக்கின்றார்கள்.

ஆனால், இந்தப் பேரிடருக்கு, பேரவலத்துக்கு மூல காரணத்தைத் தேடி, நாடி, அதற்கு சிகிச்சையளிக்காமல், நோயின் குணங்குறிக்கு சிகிச்சை அளிக்கவே – மருந்துகள் கொடுக்கவே – அவர்கள் முயலுகின்றார்கள் என்று தோன்றுகின்றது.

நாட்டின் இப்போதைய பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியையும், பிரதமரையும் மாற்றினால் போதும் என்ற கணக்கில் அவர்கள் சிந்திக்கின்றார்கள்.

நாட்டில் நீண்டகாலம் புரையோடிப் போயிருக்கும் பேரினவாதம் என்ற புற்றுநோயில் பரவிய பெருந்தொற்றுகள்தாம் ஊழல், மோசடி, குடும்ப ஆட்சி, அராஜகம், நாட்டைக் கொள்ளையிடும் நிர்வாகம் போன்றவை எல்லாம். பேரினவாத நோயில் குளிர்காய்ந்தபடிதான் இந்த அழிவு, நாச வேலைகளை எல்லாம் – நாட்டைச் சீரழிக்கும் துஷ்டத்தனங்களை எல்லாம் – இந்த ஆட்சியாளர்களால் முன்னெடுக்க முடிந்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஆகையினால், இந்த ஆட்சியாளர்களை மாற்றுவது என்பது இப்பத்தியில் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி தலையிடிக்கு தலையணையை மாற்றும் பரிகார முறைதான்.

ஆட்சியாளர்கள், ஆட்சிப் பீடம் மாற்றப்பட வேண்டும் என்பது வாஸ்தவம்தான். அதில் சந்தேகமில்லை. ஆனாலும் அதனையும் கடந்து சீரிய கிசிச்சை முறைமை ஒன்று பின்பற்றப்பட்டால்தான் நாடு தேறவோ, மீண்டெழவோ முடியும்.

இன்றைய பொருளாதாரப் பின்னடைவு எதனால் ஏற்பட்டது என்பதைக் கண்டறிந்து, அதற்கான தீர்வை தேடிப் பெறாது பொருளாதாரத்தை மீண்டெழ வைக்கலாம் என ஆட்சியாளர்கள் சிந்திப்பது அபத்தமானது என முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் ரெலோ பிரமுகருமான சபா குகதாஸ் சுட்டிக்காட்டுவதும் கூட மேற்படி விடயத்தைத்தான்.

இனப்பிரச்சினை என்ற புரையோடிப் போய் விட்ட புற்றுநோயினால்தான் நாடு இன்றைய நலிவு நிலைக்கு வந்திருக்கின்றது. பேரினவாதம் என்ற கொடூரத் தொற்று நோய் நாட்டைப் பீடித்து, சின்னாபின்னமாக்கி, சீரழித்து, முழு மக்களையுமே இன்றைய இழி நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தியமைக்கு இனப்பிரச்ச்னை என்ற நோயும், அதனூடாக ஊடுருவித் தொற்றிய பேரினவாத விஷக் கிருமிகளும்தான் பிரதான காரணம். அதன் பக்க விளைவுகள்தாம் ஊழல், மோசடி, சூறையாடல், குடும்ப ஆட்சி முதலிய கொடூரங்கள். அந்தக் கொடூரங்களின் வெளிப்பாடுகள்தாம் இந்த ஆட்சியாளர்களும் அவர்தம் போக்குகளும்.

ஆகவே நாட்டை மீட்பதற்கான மூல சிகிச்சை என்பது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் மருத்துவமாகத்தான் இருக்க வேண்டும்; இருக்க முடியும்.

# ஐக்கிய மக்கள் சக்தியினர் முன்னரே அறிவித்திருந்தால் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை பரிந்துரைத்திருக்கோம்

## விமல் வீரவன்ஸ தகவல்



பிரதி சபாநாயகராக இம்தியாஸ் பாகீர் மாக்கரை பரிந்துரைப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி எம்மிடம் கூறியிருந்தால் நாமும் அவருக்கேஆதரவளித்திருப்போம்.அவ்வாறன்றி இறுதி நேரத்தில் எதற்காக சதி செய்தனர்? அரசாங்கத்தை பாதுகாப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ செயற்படுகிறார் என்பது இதன் மூலம் அம்பலமாகியுள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் கட்சித் தலைவர்களின் கூட்டு ஊடகவியலாளர் மாநாடு வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இதன் போது பிரதி சபாநாயகர் விவகாரம் தொடர்பில் எழுந்த சர்ச்சை தொடர்பாகத் தெளிவுபடுத்தும் போதே விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எதிர்க்கட்சி என்பது ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமல்ல. அரசாங்கத்திலிருந்து விலகிய நாமும், ஜே.வி.பியும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் எதிர்க்கட்சியிலேயே உள்ளோம்.

எனவே எமக்கான ஒரு பொது வேட்பாளராகவே பிரதி சபாநாயகர் பரிந்துரைக்கத் தீர்மானிக்கப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்மானத்தால் அனைத்தும் சிதைவடைந்தது.

ஐக்கிய மக்கள் சார்பில் பரிந்துரைக்கப்பட்டவருக்கு ஜே.வி.பியின் வாக்குகளைக் கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலேயே சஜித் உள்ளார்.

நாம்பரிந்துரைத்தபெயரில்அவர்களுக்கு ஆட்சேபனை அல்லது விருப்பமின்மை காணப்பட்டிருக்குமாயின் அதனை முன்னரே எம்மிடம் கூறியிருக்கலாம். அவ்வாறு கூறியிருந்தால் அவர்கள் பரிந்துரைக்கும் நபருக்கு நாம் எமது ஆதரவை வழங்கியிருப்போம்.

தற்போது சுயாதீனமாகச் செயற்படும் நாம் அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்படுகின்றோம் என்று காண்பிக்க வேண்டும் என்பதே பொதுஜன பெரமுனவின் இலக்காகும். நாம் பொதுஜன பெரமுனவுடனேயே இருக்கின்றோம் என்று காண்பிக்கும் இலக்கு சஜித்தினுடையதாகும்.

இரு தரப்புமே எம்மை இலக்கு வைத்தே செயற்படுகின்றனர். எதிர்க்கட்சி தலைவராக இருந்து கொண்டு சஜித், ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு சார்பாகவே செயற்படுகின்றார். இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

– என்றார்.

# விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு ஏற்பாடு

## சானக வகும்பர தெரிவிப்பு

விளைச்சல் வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் முன்னெடுக்கப்படும்.

உர விநியோகத்துக்கு விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்தவும், விவசாயிகளுக்கு நிவாரண அடிப்படையில் உரத்தை விநியோகிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என விவசாயத்துறை அமைச்சர் சானக வகும்பர சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம் பெற்ற கூட்டத் தொடரின் போது சிறுபோக விவசாய நடவடிக்கைகளுக்கு விவசாயிகளுக்கு நிவாரண அடிப்படையில் உரம் வழங்கப்படுமா அல்லது இலவசமாக உரம் வழங்கப்படுமா, பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு எப்போது வழங்கப்படும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த கேள்விக்கு மேற்கண்டவாறு பதிலளித்தார்.

சிறுபோக விவசாய நடவடிக்கைக்கு தேவையான சேதன பசளை மற்றும் சேதன திரவ உரம் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வழங்கும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன்,யூரியா உரத்தை இறக்குமதி செய்யும் பணிகளும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உலகில் தற்போது யூரியா உரம் உற்பத்தி மற்றும் பாவனை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவில் இருந்து 65 ஆயிரம் மெற்றிக்தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்ய இராஜதந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இறக்குமதி செய்யப்படும் யூரியா உரத்தை ஒரு ஏக்கர் விவசாய காணிக்கு 25 கிலோகிராம் அடிப்படையில் வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

கடந்த காலங்களில் விவசாய விளைச்சல் வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கை திங்கட்கிழமை முதல் முன்னெடுக்கப்படும். உரம் விநியோகஸ்தர்கள் அதிக விலைக்கு உரத்தை விற்பனை செய்வதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உரம் விநியோகத்திற்காக விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்தவும், விவசாயிகளுக்கு நிவாரண அடிப்படையில் உரத்தை விநியோகிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

– என்றார்.

# ரெலோ தலைவரின் நினைவேந்தல் நேற்று



கொழும்பு, மே 07

1986 மே 6ஆம் திகதி சகோதர இயக்க மோதலில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறீ சபாரத்தினம், அவருடன் உயிர் நீத்த முந்நூறுக்கும் மேற்பட்ட போராளிகள் பொது மக்களுக்கு நேற்று கோண்டாவில் அன்னங்கை ஒழுங்கையில் யாழ் மாவட்ட ரெலோ கட்சியினரால் நேற்று வெள்ளிக்கிழமை நினைவேந்தல் செய்யப்பட்டது.

# லஞ்சம், ஊழலுக்கு எதிரான நடவடிக்கைக்கு நல்லாட்சியின் போது பல தடைகள் ஏற்பட்டன

## அந்த அரசின் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்க விசனம்

லஞ்சம், ஊழல் மற்றும் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு எமது நல்லாட்சி காலத்தின்போது பல்வேறு தடைகள் ஏற்பட்டன என அப்போதைய சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராகவிருந்த சாகல ரட்ணாயக்க தெரிவித்தார்.

சட்ட மா அதிபர் திணைக்களம், குற்றவியல் விசாரணை திணைக்களம், லஞ்சம் மற்றும் ஊழல் மோசடி தடுப்பு திணைக்களம், நிதி மோசடி விசாரணைப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவினருக்கு விசாரணைகளை முன்னெடுத்து செல்வதற்கு தடைகளும் அச்சுறுத்தல்களும் காணப்பட்டதாக மேலும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் –

அரசாங்கத்தை சார்ந்தவர்கள் மற்றும் அரசாங்கத்தை சாராதவர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படும் பல்வேறுபட்ட தகவல்களை ஜே.வி.பியின் ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பினர் அண்மையில் ஊடக சந்திப்பொன்றின்போது வெளியிட்டிருந்தனர்.

2015/2019 ஆண்டு காலப் பகுதிகளில் ஆட்சி செய்த அரசாங்கத்தால், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் தொடரப்பட்ட வழக்குகள் தொடர்பில் அங்கு பேசப்பட்டிருந்தன.

ஆகவே, அந்த அரசாங்கத்தில் நான் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக இருந்ததால் அவை தொடர்பாகத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

இந்த விசாரணைகளின்போது, நாம் பின்பற்றியிருந்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் மக்களுக்கு தெளிவுப்படுத்துவதற்காக இந்த ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது.

சட்டம்மற்றும்ஒழுங்குஅமைச்சராக2 ஆண்டுகளும் 3 மாதமும் செயற்பட்டிருந்தேன். வழக்கு விசாரணைகளின் போது வெளிப்படைத்தன்மையான ஒழுங்கு நடவடிக்கைகளையே நாம் பின்பற்றியிருந்தோம்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது, நாட்டில் நீதியை நிலைநாட்டுவதுடன்,சட்டம் மற்றும் ஒழுங்கு பின்பற்றப்பட வேண்டும் என்பதற்காகவே மக்கள் எங்களுக்கு வாக்களித்திருந்தனர்.

மேலும், இன, மத, மொழி, கட்சி பேதமின்றி நாட்டிலுள்ள அனைத்து மக்களும் ஒரே விதமாக நடத்தப்பட வேண்டும் என்பதுடன் மகிழ்ச்சியாக வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காகவே மக்கள் எம்மைத் தேர்ந்தெடுத்திருந்தனர். இதனை நாம் நடைமுறைப்படுத்தி இருந்தோம்.

எமது ஆட்சியின்போது திருடர்களைப் பிடிக்கவில்லை, வழக்குகளை விசாரணைக்கு எடுக்காமல் இருந்தார்கள், தாமதப்படுத்தி வருகின்றனர், அரசியல் பலிவாங்கல்கள் என பல்வேறு விதமான குற்றச்சாட்டுக்களை எம்மீது தற்போதும் சுமத்தி வருகின்றனர்.

உண்மையிலேயே, இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு முன்னெடுத்து சென்ற நிறுவனங்களுக்கு மிகவும் கஷ்டமான காலமாகவே அப்போதைய சூழ்நிலை இருந்தது. எவ்வாறு இது நடந்தது. நாம் அரசாங்கம் அமைப்பதற்கு முன்னர் இருந்தே, ஊழல் மோசடி குறித்து பாரியளவில் பேசப்பட்ட விடயமாகவே இருந்து வந்தது.

எனினும், இவை முறைப்பாடுகளாக கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. பெரிய நபர்களுக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கு எமது நாட்டில் அச்சம் காணப்பட்டிருந்தது. ஆகவே, அந்த அச்சத்தை இல்லாமல் செய்வதையே பிரதானமாக செய்ய வேண்டியிருந்தது.

மேலும், முறைப்பாடுகளை பதிவு செய்ய மற்றும் ஆவணப்படுத்துவதற்கான சிறந்த இடமொன்று அமைக்கப்பட வேண்டியிருந்தது. இதற்காகவே ஊழல் மோசடி ஒழிப்பு குழுவொன்றை அமைச்சரவை அங்கீகாரத்துடன் ஸ்தாபித்தோம். இந்த குழுவில் நாட்டின் சட்டம், கணக்காய்வு ஆகியவை தொடர்பாகக் கைதேர்ந்த அதிகாரிகள் எமக்குத் தேவைப்பட்டனர். இவர்களை ஒன்றிணைத்துக்கொண்டே நாம் வேலைகளை முன்னெடுத்தோம்.

அவர்கள், அந்த முறைப்பாடுகளை பதிவு செய்து ஆவணப்படுத்தியிருந்ததுடன், விசாரணைகளுக்காக அவற்றுக்கு பொருத்தமான நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தனர். 2016, ஒகஸ்ட் 31 இல் 1,077 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன. இதில் 438 பாரியளவிலான முறைப்பாடுகளாக இருந்ததுடன், நிர்வாக மட்டத்திலான ஊழல் மோசடிகள் 538 இருந்தன.

குற்றவியல் விசாரணை திணைக்களம் (சி.ஐ.டி), லஞ்சம் மற்றும் ஊழல் மோசடி தடுப்பு திணைக்களம், நிதி மோசடி விசாரணைப் பிரிவு ஆகியவற்றுக்கு இவை அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

எந்தவொரு விசாரணைகளின்போதும் சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாகவும் வெளிப்படைத் தன்மையாகச் செயற்படுமாறு அவர்களிடம் வலியுறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு விசாரணைகளில் ஏதேனும் முன்னேற்றம் கிடைக்கப்பெறும் பட்சத்தில் சட்ட மா அதிபரின் ஆலோசனையை பெற்று நீதிமன்றத்தில் ஆவணப்படுத்துமாறு கூறப்பட்டிருந்தது. வழக்கு விசாரணை நிறைவுக்கு செல்லும் வரை காத்திராமல், ஒவ்வொரு சந்தர்ப்பத்தின்போதும் ஆவணப்படுத்துமாறு கோரியிருந்தோம்.

சில சந்தர்ப்பங்களின்போது, சில அரசியல்வாதிகள், அரச உயரதிகாரிகள் ஆகியோரை தடுப்புக் காவலில் வைக்க வேண்டுமென கோரி நீதிமன்றங்களில் கோரப்பட்டதுடன், தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டிருந்தனர்.

எனினும், இவற்றை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்கு விசாரணைகளை முன்னெடுக்கும் நிறுவனங்களுக்கும், சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கும் கடினமானதாக இருந்தது.

ஏனெனில், அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன. இந்த விசாரணைகளுக்கான சாட்சிகள் அழிக்கப்பட்டிருந்ததுடன், வேறு சில நாடுகளுடன் கொடுக்கல் வாங்கல்கள் இருந்தன, சர்வதேச கொடுக்கல் வாங்கல்கள் காணப்பட்டிருந்தன. பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டன. இவ்வாறான பிரச்சினைகள் காரணமாக விசாரணைகளை முன்னெடுத்து செல்வதில் காலதாமதம் ஏற்பட்டது.

இவ்வாறான சந்தர்ப்பங்களின்போது சாட்சிகளை சேகரிக்கும் பிரச்சினை, சாட்சிகள் கொடுக்கும் நிறுவனங்கள் தாமதம் ஏற்படுத்தியிருந்ததுடன் தடைகள் இருந்ததுடன், அதிகாரிகள் பற்றாக்குறை நிலவியது. இவ்வாறான காரணங்கள் தொடர்ந்து வந்ததால் எங்களால் விசாரணைகளை முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் காணப்பட்டது. – என்றார்.

# எதிர்த்தரப்பு பிளவை அரசு சூட்சுமமாக தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவிப்பு

எதிர்க்கட்சிகளுக்குள் ஏற்பட்ட பிளவை பொதுஜன பெரமுன மிகவும் சூட்சுமமாக அதற்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. ஐக்கிய மக்கள் சக்தி இறுதி நேரத்தில் தீர்மானத்தை மாற்றி, அரசாங்கத்துக்கு சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தமை துரதிஷ்டவசமானதும் கவலைக்குரியதுமாகும் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் கட்சித் தலைவர்களின் கூட்டு ஊடகவியலாளர் மாநாடு வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இதன் போது பிரதி சபாநாயகர் விவகாரம் தொடர்பில் எழுந்த சர்ச்சை தொடர்பாகத் தெளிவுபடுத்தும் போதே தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சுயாதீனமாக செயற்படும் 11 கட்சித் தலைவர்களும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கலந்தாலோசித்த பின்னரே எதிர்க்கட்சியின் சார்பில் பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாபிட்டியவை பரிந்துரைப்பதற்குத் தீர்மானித்தோம்.

நாமும் தற்போது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக செயற்படுவதால் எதிர்க்கட்சியிலிருந்து அவரை தெரிவு செய்ய கலந்துரையாடலில் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் இரு சந்தர்ப்பங்களில் ரஞ்சித் மத்தும பண்டாரவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொண்டேன்.

அதன் போது எதுவும் கூறாதவர்கள் முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பமான பின்னர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை பரிந்துரைக்க வேண்டாம் என்று கூறினர். எனினும் எமக்கிருந்த குறுகிய காலத்தில் அதனைச் செய்ய முடியாது என்பதால் , நாம் தீர்மானத்தை மாற்றவில்லை.

பின்னர் நாம் சியம்பலாப்பிட்டியவின் பெயரை பரிந்துரைத்த போது , ஐக்கிய மக்கள் சக்தி இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின்பெயரைபரிந்துரைத்தது.எதிர்த்தரப்பினரான எம்மத்தியில் ஏற்பட்டுள்ள பிளவை தமக்கு சாதமாகப் பயன்படுத்திக் கொண்ட அரசாங்கம் மிகவும் சூட்சுமமாக ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை ஆதரிப்பதாக அறிவித்தது.

உண்மையில் பொதுஜன பெரமுனவின் சார்பில் அஜித் ராஜபக்ஷவின் பெயரே பரிந்துரைக்கப்படவிருந்தது. இறுதி நேரத்தில் அதனை அறிவிக்காது ஜீ.எல்.பீரிஸ் எமது வேட்பாளரையே ஆதரிப்பதாக அறிவித்தார்.

இதன் மூலம் பொதுஜன பெரமுனவினரின் ஆதரவும் 148 வாக்குகள் கிடைக்கப் பெற்றன. இந்த பிளவு ஏற்பட்டிருக்காவிட்டால் இதில் சுயாதீனமாக இயங்கும் 40 உறுப்பினர்களின் வாக்குகளும் , டலஸ் அழகப்பெரும போன்ற அரசாங்கத்தை ஆதரிக்காத 13 உறுப்பினர்களின் வாக்குகளும் கிடைக்கப் பெற்றிருக்காது.

அதற்கமைய எதிர்க்கட்சியின் சார்பில் பொதுவான ஒருவரின் பெயரை பரிந்துரைத்திருந்தால் மேற்கூறப்பட்ட 53 வாக்குகளுடன் ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைக்கப் பெற்ற 65 வாக்குகளையும் சேர்த்து மிக இலகுவாக 121 வாக்குகளைப் பெற்றிருக்க முடியும்.

அவ்வாறெனில் அரசாங்கத்துக்கு 95 வாக்குகள் மாத்திரமே கிடைத்திருக்கும். இதன் ஊடாக நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பிலும் அரசாங்கத்துக்கு ஒரு சிறந்த அறிவிப்பையும் எம்மால் வழங்கியிருக்க முடியும். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி இறுதி நேரத்தில் எடுத்த தீர்மானத்தால் அரசாங்கம் இன்றும் தமக்கே பலம் இருப்பதாக இலகுவாகக் காண்பித்துள்ளது. உண்மையில் இது துரதிஷ்டவசமானதும் கவலைக்குரியதுமாகும். – என்றார்.

# அரச ஊழியர் சம்பள விவகாரம்; முகநூல் விளம்பரத்துக்கு மறுப்பு

## அரச ஊடகம் தெரிவிப்பு

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் கடிதத் தலைப்பைப் பயன்படுத்தி 2022.05.03 என்று திகதியிப்பட்ட கடிதமொன்றில், ஹர்த்தால் நடவடிக்கையில் ஈடுபடும் அரச ஊழியர்களின் மே மாத சம்பளம் வழங்கப்படமாட்டாது என முகநூலில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரம் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அலுவலகம் அரச நிர்வாக அமைச்சுக்கு இவ்வாறு அறிவிப்பு விடுக்கவில்லை என்பதுடன், இந்த பொய்ப் பிரசாரம் தொடர்பில் உரிய அதிகாரிகள் விசாரணைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

54 வயதுடைய இந்தச் சந்தேகநபர், கொஸ்ஹேன, போருவதண்ட பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

பிரதேசவாசிகளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் ஹொரணை பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகளால் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த, அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட போர 16 வகை துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது எனவும், அதற்கான அனுமதிப்பத்திரத்தைச் சந்தேகநபர் வைத்திருக்கவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக இங்கிரிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# வலிசுமந்த மாதத்தின் விழிநிமிர்வுடன் ஈழப்படுகொலையின் சுவடுகள்-2009







உலகவல்லாதிக்க நாடுகளின் ஒட்டு மொத்த ஆதரவோடு, தமிழர் தாயக தேசத்தில் பௌத்த சிங்களப் பேரினவாத அரசு சுதந்திரத்துக்காய் எழுந்த குரல்கள் பயங்கரவாதம் என்ற ஒற்றைச்சொல்லுக்குள் சிறுமைப்படுத்தி மேற்கொண்ட சாட்சியமற்ற போரின்அழியா சாட்சியாக உருவாக்கப்பட்டிருக்கும் 'ஈழப்படுகொலையின் சுவடுகள் 2009 -பாகம் 01' கட்டுரைத் தொகுப்பு நூல் எதிர்வரும் 14.05.2022 சனிக்கிழமை அன்று சுவிட்ஸர்லாந்தில் உள்ள தமிழர் கலரி மண்டபத்தில் நிதர்சனம் நிறுவனத்தினால் வெளியிடப்படவுள்ளது.

புலம்பெயர் வாழ் ஈழப் படைப்பாளியான அறிவுச்சோலை நிலவனின் 'ஈழப்படுகொலையின் சுவடுகள் 2009 பாகம் 01 நூலானது, பௌத்த சிங்கள பேரினவாத அரச ஆட்சி பீடங்கள் உலக வல்லரசுகளின் துணையுடன் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட தமிழினப்படுகொலைகளின் கொடூரங்கள். ஒடுங்கிய நிலப்பரப்பில் போர் வெறியர்களின், அகோரத் தாண்டவம் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்களை இருப்பிடமின்றி, உணவு, மருத்து வசதிகளின்றி பாதுகாப்பு வலயங்கள் , படுகொலைக் கலம் ஆகிட தொடர்ச்சியா விமான குண்டு வீச்சுக்கள் எறிகணைத்தாக்குதல்கள், கொத்துக்குண்டுத் தாக்குதல்கள், இரசாயண எரிகுண்டுத்தாக்குதல்கள் எனச் சிங்கள அரச படைகளினால் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட 21ம் நூற்றாண்டின் அதியுச்ச இன அழிப்பின் சாட்சிகளாய் கண்ணீர் சிந்திய நாள்களை கண்முன் கொண்டு வருகின்றது.தமிழினப்படு கொலைகளின் வரலாறு திட்டமிட்டு மறக்கடிக்கப்பட்டு வரும் இன்றையசூழலில், நினைவுகளை அடைகாத்து உலகத் தமிழரின் மனச்சாட்சியின் முன் ஆவணத் தொகுப்பாக கொண்டுவந்திருக்கும் 'ஈழப்படுகொலையின் சுவடுகள் 2009 பாகம் 01 என்னும் இந் நூல் வெளியீட்டு பேர்ன் சிவன் ஆலயம் தமிழர் களறி மண்டபத்தில் 14-05-2022 சனிக்கிழமை மாலை 2 மணிக்கு வெளியிடப்பட உள்ளது.

இதனைத் தொடர்ந்து நூல் அறிமுக நிகழ்வு இந்தியா, கனடா, ஆஸ்திரேலியா, பிரித்தானியா, பிரான்ஸ், நோர்வே, ஜேர்மன், (திகதி இடம் நேரம் பின்னர் அறிவிக்கப்படும்) போன்ற நாடுகளில் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கைத்தீவில் பரந்து விரிந்த கொடிய போரில், வாழ்வதற்காய் போராடிவேண்டிய ஒருவரலாற்றுக் கட்டத்தில், எமது தமிழினம் சந்தித்த சவால்களும் அழிவுகளும் பெரியவை. முள்ளிவாய்க்கால் பேரழிவின் இன அழிப்பு நடந்து 12 வருடங்கள் கடக்கும்இந்த சூழ்நிலையில் ஒரு தேசமாக, தமிழ்த் தேசிய இனமாக சிந்திக்க வேண்டும்.

2009 போர் நடந்த காலத்தில் நடந்த படுகொலைகள் தொடர்பாக மட்டுமே பேசப்படுகிறது. அதற்கு முன்பும் அதற்கு பின்பும் இன்று வரையிலும் தொடரும் இனப்படுகொலை, இன அழிப்பு, இன ஒடுக்குமுறை தொடர்பாக உலக அரங்கில் நாம் பேச வேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இயங்கு விசையாக உலகத் தமிழர்களை இயங்கவைத்துக் கொண்டிருக்கும் தமிழினப் படுகொலைக்கான நீதி கேட்கும்

போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் விதமாக புலம்பெயர் வாழ் ஈழத்தமிழ் படைப்பாளிஅறிவுச்சோலை நிலவன் எழுத்தில் நிதர்சனம் நிறுவனம் வெளியிடும் 'ஈழப்படுகொலையின் சுவடுகள்2009 பாகம் 01 நூல் வெளியீட்டு நிகழ்விற்கு அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

அவலங்களும் அழிவுகளுமே வாழ்வாகிப்போனாலும் நாளை நமக் குண்டு என்றநம்பிக்கையில் எழுந்து நடக்கின்றோம். அவலக்குரல் எழுப்பிய எங்கள் உறவுகளின்குரல் நியாயம் கிடைக்காமல் ஓய்ந்துபோகாது.

உலகில் எந்தவொரு தேசிய இனமும் தனது விடுதலைப் போராட்டத்தில் சந்தித்திராத வெங் கொடுமைகளையும் பேரிழப்புக்களையும் சந்தித்துள் ளோம். நடந்து முடிந்த பேரவலத்தின் விளைவுகளைஇனியாவது கூட்டாக எதிர்கொள்ளல் வேண்டும். இதிலிருந்து கூட நாங்கள் கூட்டாகமீள எழவில்லை எனில் வரலாறு ஒரு போதும் எம்மை மன்னிக்காது.

வெளியீட்டு நிகழ்வுக்கு அனைவரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம்.

# இலங்கையில் வன்முறை, இனப் படுகொலை; பிரித்தானியாவில் ஆவணப் படம் வெளியீடு

இலங்கையில் தொடரும் 'வன்முறை சுழற்சிகள் மற்றும் இனப்படுகொலை' தொடர்பில் பிரித்தானியா நாடாளுமன்றத்தில் ஆவணப்படம் திரையிடப்பட்டது.

இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதாக கூறப்படுவதில் இருந்து,இலங்கையில் ஆட்சிக்கு வந்த இனவாத அரசாங்கங்கள் தமிழ் மக்கள் மீது தொடரும் வன்முறை சுழற்சிகள் மற்றும் இனப் படுகொலை என்பதை சர்வதேச சமூகத்துக்குக் காண்பிக்கும் வகையில், ஓர் ஆவணப்படம் தயாரிக்கப்பட்டது. பல்வேறு ஆதாரங்களில் இருந்தும் படங்கள் மற்றும் வீடியோ பதிவுகளைப் பயன்படுத்தியும் உருவாக்கப்பட்ட ஆவணப் படம் 27 ஏப்ரல் 2022 அன்று பிரித்தானிய நாடாளுமன்றத்தில் திரையிடப்பட்டது.

கொவிட் மற்றும் நாடாளுமன்ற விதிமுறைகள் காரணமாகப் பார்வையாளர்கள் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டன. அனைத்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் தமிழ் சமூகத் தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர். இறுதியாக, கேள்வி-பதில் நிகழ்ச்சியுடன் நிகழ்வு நிறைவுற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த அனைத்து கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிக விசனத்துடனும் அதிர்ச்சியுடனும் இந்தக் காணொளிகளை பார்வையிட்டனர். கலந்து கொண்ட பார்வையாளர்கள் மனமுடைந்து கண்ணீருடன் இனப்படுகொலை காணொலிகளை பார்வையிட்டனர்.

இந்த ஆவணப் படத்தின் முக்கிய நோக்கம், இலங்கை தொடர்பான கொள்கை வகுப்பாளர்களுக்கும் அது தொடர்பிலான முடிவை எடுப்பவர்களுக்கும், தமிழ் மக்களின் அவல நிலைமையைத் தெரியப்படுத்துவதாக இருந்தது.

சிறிலங்கா மீது பொருளாதாரத் தடைகளையும், போர் குற்றவாளிகளை தமது நாட்டுக்குள் அனுமதிப்பதற்கான தடைகளையும் அமுல்படுத்த முடியும். மனித உரிமைப் பாதுகாவலர்களும், அமைப்புகளும், தமிழர்கள் மீதான இனப்படு கொலையின் உண்மை நிலைமையை உறுதிப்படுத்துவதற்கு இந்த ஆவணப்படம் சிறந்த ஆதாரமாக அமையும்.

பிரித்தானியாவிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து, இலங்கை அரசின், தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை ஆதாரங்களை வெளிப்படுத்தும் புகைப்பட கண்காட்சி ஒன்று 2008 ஆம் ஆண்டு பிரித்தானிய நாடாளுமன்றத்தில் பிரித்தானிய தமிழர் பேரவையினரால் முதன்முதலாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக,2012 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு புகைப்பட கண்காட்சி மேலதிக தகவல்கள் மற்றும் புகைப்பட ஆதாரங்கள் திரட்டப்பட்டு நாடாளுமன்றத்துக்குள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அங்கு விவாதிக்கப்பட்ட விவரங்கள் வருமாறு –

தமிழர் தாயகத்தில் இராணுவம் அகற்றப்படல் மற்றும் நாடளாவிய ரீதியில் படைக் குறைப்பு செய்தல். ஆட்சி மாற்றத்துக்குப் பதிலாக, முழுமையான கட்டமைப்பு மாற்றம் (மையப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சிஅரசு நிறுவனங்களின் மறுசீரமைப்பு) முக்கியமானது.

இழப்பீடு: தீவின் வடக்குக் கிழக்கை போரால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தல், தமிழர் தாயகமான வடக்கு கிழக்கினை இலங்கையின் ஏனைய பகுதிகளில் காணப்படும் சமூக அபிவிருத்தி குறிகாட்டிகள் மட்டத்துக்குக் கொண்டு வருவதற்கு புனர்வாழ்வு, மீள் குடியேற்றம், மீள் கட்டமைத்தல் மற்றும் புனரமைப்புச் செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கான விசேட இடைக்கால அதிகார சபையை நிறுவுதல். வன்முறைச் சுழற்சிகள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான அரசியல் தீர்வொன்றுசுயநிர்ணய உரிமை மற்றும் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கு வதற்காகசர்வதேச நடுவர் மன்றம் அமைக்கப்பட வேண்டும்.

சிறிலங்கா மீது அனைத்து அழுத்தங்களையும் பிரயோகித்து தேவைப்பட்ட அளவிலான தடைகளை படிப்படியாகப் பயன்படுத்தி காலக்கெடுவுடன் கூடிய திட்டத்தின் அடிப்படையில் நீண்ட காலத் தீர்வை உருவாக்கி செயற்படுத்திட வேண்டும். அதே வேளையில் பொது மக்கள் பாதிக்கப்படாமல் அவர்களுக்கான உணவு, மருத்துவம் மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்களைப் பாதிக்காது கரிசனை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சிறிலங்காவில் போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிரான உலகளாவிய மனித உரிமைகள் தடைகள் ஆட்சிச் சட்டம் பிரயோ கிக்கப்பட வேண்டும்.

இலங்கையுடனான நெறிமுறையற்ற வர்த்தகத்தை நிறுத்த வேண்டும். மனித உரிமைகளை கடைபிடிக்க இலங்கையை நிர்ப்பந்திக்க, வர்த்தக மற்றும் இராஜதந்திர தடைகளை விதித்தல்.

கடந்தகால குற்றங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க உத்தரவாதம் அளிக்கும் ஒரு நடவடிக்கையாக இலங்கையில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநிறுத்துவதற்கு சர்வதேச குற்றவியல் பொறிமுறையை நிறுவுதல். வழி எனக் கூறப்பட்டுள்ளது.

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** நமது நாட்டின் இன்றைய நிலையை எந்தத் தலைவராலேனும் மாற்றமுடியும் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:-** ஒரேயொரு தலைவரால் மட்டும் நிச்சயம் முடியும் என்று நினைக்கிறேன். பச்சை, சிவப்பு, நீலம் என அனைத்து வர்ணமும் கலந்து அல்லது அவற்றைக் கடந்து நிற்கும் அந்தத் தலைவருக்குப் பெயர் 'இறைவன்' என்கிறார்கள். அந்தத் தலைவர் அறத் தகுதியை அடிப்படையாய்க் கொண்டு, மேலுள்ளவரைக் கீழே இறக்குவார், கீழ் உள்ளவரை மேலே ஏற்றுவார். அத் தலைவரை 'அலகிலா விளையாட்டுடையார்' என்கிறார் எங்கள் கவிச்சக்கரவர்த்தி கம்பர். அனைத்து மக்களையும் ஒன்றாய் நேசிக்கின்ற, அனைத்து மக்களது நேர்மையான விருப்பங்களையும் ஒன்றாய் நிறைவேற்றுகின்ற, அனைத்து மக்களது வாழ்வையும் அவரவர் செயலுக்கேற்ப ஒன்றாய் உயர்த்துகிற உண்மை ஜனநாயகவாதி அவர்தான் என்கிறார்கள். அந்தத் தலைவர் நினைத்தால்த்தான் நம் நாட்டின் இன்றைய நிலை மாறும் என்று கருதுகிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ எப்போதும் உண்மையான 'மேதகு' அவர்தானுங்கோவ்.**

**2. கேள்வி:-** வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடாமே?

**பதில்:-** வன்னியில் இறுதி யுத்தம் நடந்துகொண்டிருந்தபொழுது, அங்கு மருந்துகள் அனுப்புவதையும் அரசு தடைசெய்தது. அப்போது தமிழ் மக்கள் பட்ட துன்பத்தைச் சொல்லி மாளாது. அன்றாடம் மாரி மழை பொழிவதுபோல, வானத்திலிருந்து வீழ்ந்த 'ஷெல்' குண்டுகளால் பெரும் காயங்களுக்காளான தமிழ்மக்கள் 'அன்டிபயோட்டிக்' போன்ற முக்கிய மருந்துகளும் கிடைக்காமல் தத்தளித்தார்கள். இடையில் செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் ஒன்று அரசிடம் அனுமதி பெற்று நோயாளிகளைத் திருகோணமலைக்கு அழைத்து வந்தது. அப்போது அங்கு வேலை செய்த ஒரு டாக்டர், தன்னிடம் கொண்டுவரப்பட்ட நோயாளிகள் எல்லோருடைய புண்களிலும் புழுக்கள் நிறைந்திருந்ததாய் என்னிடம் சொல்லிக் கதறி அழுதார்.

அன்று தமிழர்களுக்கு இனவாதத்தின் பேரால் இந்தத் துன்பத்தைப் பரிசளித்தவர்கள், இன்று தமது மக்களுக்கே அந்நிலையை உருவாக்கி விட்டார்கள். தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் இந்த இக்கட்டான நிலைகண்டு நேர்மையுள்ள எந்தத் தமிழனும், தமக்கு முன்பு ஏற்பட்ட கதி சிங்களவர்களுக்கும் இப்போது ஏற்பட்டு விட்டது கண்டு நிச்சயம் மகிழமாட்டான் என்பது மட்டும் உறுதி. ஆனாலும் இன்றைய நிலையை அன்றைய நிலையோடு ஒப்பிடாமலும் இருக்க முடியவில்லை.

இதுநாள் வரையும் மக்களை நோய்கள் கொன்று தீர்த்தன. இனி அந்த வேலையை மருந்துகள் செய்யப் போகின்றனபோல. இயற்கை ஏதோ வகையில் இலங்கைத் தாயின் புதல்வர்களைக் காக்கும் என்று நம்புவோம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ மற்றப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு வந்தால், 'அது மருந்துக்கும் கிடைக்குதில்லை' என்று சொல்வார்கள். மருந்துக்கே தட்டுப்பாடு வந்தால் அதை எப்படித்தான் சொல்வதாம்? ஹி.. ஹி..!**

**3. கேள்வி:-** மஹிந்த குடும்பத்தாரோடு இருந்த பதினைந்தாண்டுத் தொடர்பினை முறித்துக் கொண்டுவிட்டதாய் அறிவித்திருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினரின் கருத்தை விமர்சித்தும், அவர்களைச் சந்தர்ப்பவாதிகளாய் வர்ணித்தும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வெளியிட்டிருக்கும் அறிக்கையைப் பார்த்தீர்களா?

**பதில்:-** அதையும் பார்த்தேன். அவரது அறிக்கைக்குப் பதிலுரைத்து செந்தில் தொண்டமான் வெளியிட்ட அறிக்கையையும் பார்த்தேன். சுமந்திரனுக்கு இது வேண்டாத வேலை என்றே எனக்குப் படுகிறது. இப்படித்தான் சுமந்திரன் சிலநேரங்களில் தனது எல்லைகளை மறந்தும், விளையப்போகும் பயனை நினையாது பேசியும் மற்றவர்களின் பகையைச் சம்பாதித்துக் கொள்கிறார். அன்றைய அவரது அறிக்கையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களும் கூட அவரால் விமர்சிக்கப்பட்டார்கள். மற்றவர்களுக்கும் தனக்கும் நம் இனத்திற்கும் பயனில்லாத இத்தகைய விமர்சனங்களை சுமந்திரன் தவிர்த்துக் கொள்வது மிகவும் நல்லது.

பயன் தராத வார்த்தைகளைப் பேசுபவனை மனிதன் என்று சொல்லுவது தவறு என்றும், அத்தகையவன் நெல்லுக்குள் கலந்திருக்கும் பதர் போல மக்களுக் குள் கலந்திருக்கும் பதராவான் என்றும் வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார் (பயனில்சொல் பாராட்டுவானை மகன் எனல் மக்கட் பதடி எனல்).மக்களுக்குத் தலைமையேற்கச் சட்டம் மட்டும் படித்தால் போதாது கொஞ்சம் தமிழையும் படித்தால் நல்லது என்பதை சுமந்திரன் புரிந்து கொள்வாராக!

மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினை வேறு. வட, கிழக்குத் தமிழ்மக்களின் பிரச்சினை வேறு. அதனால்தான் ஆரம்பத்தில் தனிஈழக் கொள்கை முன்வைக்கப்பட்ட காலத்தில் நம் தமிழ்த் தலைவர்களுடன் கைகோர்த்து நின்ற (படங்களில்) முன்னாள் அமைச்சர் அமரர் தொண்டமான் அவர்கள், பின்னர் அக் கூட்டத்திலிருந்து மெல்ல விலகிக்கொண்டார். மலையகத் தமிழர்களைப் பொறுத்த அளவில் உரிமை என்பதைவிட சலுகைகள்தான் அவர்களுக்குப் பிரச்சினையாயிருக்கிறது. பலகாலமாய்ப் பின்தங்கி நின்ற தம் இனத்தாரை, அரசிடம் பெறும் சலுகைகள் மூலம் நிமிர்த்தி எடுக்கவேண்டிய பொறுப்பு தமக்கு இருப்பதாய் மலையகத் தலைவர்கள் நினைப்பதில் தவறிருப்பதாய்ச் சொல்லமுடியாது.

அதனால் சூழ்நிலை அறிந்து, ஆட்சியில் இருப்போருடன் இணைந்தும் பிரிந்தும் செயற்படவேண்டியது அவர்களின் சொந்த முடிவு. அதில் தலையிட வடக்குக் கிழக்குத் தமிழ்த் தலைவர்களுக்கு உரிமை இல்லை என்றே நினைக்கிறேன். மலையகத் தமிழ்த் தலைவர்களில் உரிமை பாராட்டும் அளவிற்கு நம் தலைவர்கள் இதுநாள்வரை நடந்து கொண்டதும் இல்லை. அது மட்டுமல்லாமல் அவ்வப்போது அவர்களைத் தாழ்த்திப் பேசியும், அவர்களுக்கு எதிராகச் செயற்பட்டும் கூட நம் தலைவர்களில் சிலர் நடந்திருக்கிறார்கள். இது மறுக்கமுடியாத உண்மை. அப்படியிருக்க அவர்களின் முடிவுகளைச் சுமந்திரன் விமர்சித்தது மிகப்பெரும் தவறென்றே கருதுகிறேன். ஒருவேளை மனோகணேசனை ஊக்குவிக்க அவர் அப்படிப் பேசியிருக்கலாம். ஆனால் அவரது பேச்சே (மலையக மக்களின் யாழ்ப்பாணத்தவர்களுக்கு எதிரான மனநிலையால்) மனோகணேசன் மீதான வெறுப்பையும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சிக்கான ஆதரவையும் தோட்டத் தொழிலாளர்களிடம் வளர்த்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

செந்தில் தொண்டமான் தனது அறிக்கையில் சொல்லியிருந்த ஒரு உவமை ரசிக்கத்தக்கதாகவும், ஏற்கத்தக்கதாகவும் இருந்தது. 'ஒரு பஸ்ஸில் ஏறிப் பயணிப்பவர் இடையில் அந்த பஸ் பழுதடைந்துவிட்டால், வேறு பஸ் பிடித்து தனது பயணத்தைத் தொடர்வதில் என்ன தவறு?' என அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார். அவர் கேள்வியில் நியாயம் இருப்பதாகவே எனக்குப் படுகிறது. நம்மவர்களும் இப்படிப் பல பஸ்கள் மாறியதையும் நாம் நினைவில் கொள்ளத்தான் வேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'சூப்ப்பர்!'. வாரிதியார் இதுவரை தான் பயணம் செய்த 'சுமந்திரன்' பஸ்ஸில் இருந்து இறங்கி வேறு பஸ்ஸில் பயணத்தைத் தொடரப்போகிறாரோ? அவளைத் தொடுவான் ஏன்? 'கவலைப்படுவான் ஏன்?'**

**4. கேள்வி:-** நம் நாட்டின் தற்போதைய சூழ்நிலை பற்றியே எல்லோரும் கேள்விக் கணைகளைத் தொடுக்கிறார்கள். நீங்களும் திரும்பத் திரும்பப் பதில் சொல்லிக் களைத்துவிட்டீர்கள். ஆனாலும் அது சம்பந்தமாய் ஒன்றைக் கேட்கவேண்டியிருக்கிறது. நாட்டு மக்கள் எல்லோருமாகச் சேர்ந்து 'Go Go' எனத் துரத்த, விடாப்பிடியாகப் பதவிக் கதிரையைப் பற்றிப் பிடித்திருக்கும் நம் தலைவர்களைக் காண உங்கள் மனதில் வரும் எண்ணத்தைப் பதிவு செய்யுங்களேன்.

**பதில்:-** இந்தக் கேள்விக்கு அரசியலாகப் பதில் சொல்லிக் களைத்துவிட்டேன். இலக்கியமாகப் பதில் சொன்னால் என்ன என்று தோன்றுகிறது. இவர்களின் செயலால் கம்பகாவிய நாயகனான இராமனைப் பற்றிய மதிப்பு என்மனதில் மிக உயர்ந்துவிட்டது.

முதல் நாள் இரவில் மிகப்பெரிய தேசத்தின் ஆட்சி முழுவதும் உனக்கு என்று வலியச் சொல்லப்படுகிறது. அடுத்த நாள் காலையில் ஆட்சி உனக்கில்லை என்பதோடல்லாமல், நீ காடு செல்ல வேண்டும் என்ற செய்தியும் உரைக்கப்படுகிறது. இவ்விரண்டு செய்திகளாலும் பாதிப் புறாமல் இராமன் நின்றான் என்கிறார் கம்பர். 'மெய்த்திருப்பதம் மேவென்ற போதினும், இத்திருத் துறந்து ஏகென்ற போதினும், சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரையை ஒத்திருக்கும்' முகத்தினனாய் இராமன் இருந் தான் என்ற செய்தியை கம்பனில் படித்தபோது அந்த அடிகளின் உண்மைப் பாதிப்பு, என் மனதில் ஆழப்பதியவில்லை.

தற்போது ஆட்சியைத் தந்த மக்களே 'போ, போ' என ஊரெல்லாம் ஓலமிட்டுத் துரத்தவும், அதுபற்றி எந்தக் கவலையும் இல்லாமல் பூட்டிய மாளிகைகளுக்குள் வெட்கமில்லாமல் குந்தியிருக்கும் இவர்களின் பதவி ஆசையைக் காணுகிறபோதுதான் இராமனின் உண்மைப் பெருமை என்ன என்று தெரிகிறது. தம் பிழையான நடவடிக்கையால் இராமனின் சரியான நடவடிக்கையின் தரத்தை நம் தலைவர்கள் உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள். அதற்காக இவர்களுக்கும் நன்றி சொல்லத் தோன்றுகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ இன்றைக்கானால், காடு போகச் சொன்ன கைகேயியைப் போட்டுத் தள்ளியிருப்பினமுங்கோவ். ஹி.. ஹி..**

**5. கேள்வி:-** இம்முறை நடந்த தொழிலாளர் தினத்தில் குறிப்பாக நீங்கள் எதைக் கவனித்தீர்கள்?

**பதில் :-** வழக்கமாக மே தினங்களில் ஆளுங்கட்சியின் கூட்டங்கள்தான் களைகட்டும். அக்கூட்டங்களில் ஆளுங் கட்சிகளின் முக்கிய தலைவர்கள் முழங்கித் தள்ளுவார்கள். இம்முறை மற்றைய கட்சிகளெல்லாம் கொடி கட்டிப் பறந்து கூட்டங்கள் நடத்த, ஆளுங்கட்சியின் முக்கிய தலைவர்களான ஜனாதிபதியோ, பிரதமரோ வெளியே தலையைக் கூடக் காட்டாமல் ஒளிந்திருந்தார்கள். இதுதான் இவ்வாண்டு மேதினத்தின் முக்கிய மாற்றமாய் எனக்குத் தெரிந்தது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'போனால் போகட்டும் போடா இந்தப் பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?'**

**6. கேள்வி:-** நடந்து முடிந்த இஸ்லாமியர்களின் 'ரம்ழான்' கொண்டாட்டத்தை மனதில் கொண்டு ஏதாவது ஓர் நற்செய்தி கூறுங்களேன்?

**பதில்:-** மாண்புமிக்க முஹம்மது நபிகளார் அவர்கள் ஒருமுறை நண்பர்கள் சூழ உட்கார்ந்திருந்தாராம். அப்போது அங்கு வந்த வயதான மூதாட்டி ஒருவர் நபிகளை வணங்கி, 'நான் உங்களுக்காக சில பழங்களை எடுத்து வந்திருக்கிறேன். அதனை நீங்கள் ஏற்று உண்டருள வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டாராம். நபிகள் அந்த மூதாட்டியை அன்போடு தனக்கருகில் அமர்த்தி அவர் தந்த கனிகளை ஒவ்வொன்றாக எடுத்து, அக்கனிகளின் சுவையைப் பாராட்டிப் பாராட்டி அவற்றைச் சுவைக்கத் தொடங்கினாராம். நபிகளின் பாராட்டால் மகிழ்ச்சியடைந்த அம் மூதாட்டி நபிகளை வணங்கி விடைபெற்றுத் திரும்பிச் சொன்றாளாம்.

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

# நுவரெலியாவில் அரசுக்கு எதிராக போராட்டம் கடைகளுக்கு பூட்டு; போக்குவரத்து ஸ்தம்பிதம்








நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவி வரும் நிலையில் அரசுக்கு எதிரான தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ தலைமையிலான அரசும் பதவி விலக கோரியும், தொடர் விலையேற்றத்தைக் கண்டித்தும், பெரும் போகத்துக்குத் தேவையான இரசாயன உரம் மற்றும் விவசாயத்துக்குத் தேவையான ஏனைய இரசாயன திரவியங்களை பெற்றுதருமாறு கோரி பல நகரங்களில் நேற்றும் போராட்டங்கள் தீவிரமடைந்தன.

இதற்கு ஆதரவாக மதகுருமார்கள், நகரசபை ஊழியர்கள், நுவரெலியா பொது மாவட்ட வைத்தியசாலை ஊழியர்கள், அதிபர் ஆசிரியர் மற்றும் பொதுமக்கள் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

போராட்ட பேரணி நுவரெலியா மத்திய சந்தைக்கு முன்பாக உள்ள 'கோட்டா கோ கோகம' இல் ஆரம்பிக்கப்பட்டு நுவரெலியா பிரதான வீதியினூடாக நுவரெலியா தபால் நிலையத்துக்கு முன்பாக அரசுக்கு எதிராக எதிர்ப்புக் கோஷங்கள் எழுப்பப்பட்டு, பதாதைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## உடன் பதவி விலகுவதை தவிர வேறு வழியில்லை

### ஜனாதிபதி, பிரதமரிடம் எதிரணி சுட்டிக்காட்டு



ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாகப் பதவி விலகுவதைத் தவிர வேறு வழியில்லை என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷமன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையை இதுவரை ஆண்ட எந்தவொரு அரசும் வங்குரோத்து நிலைக்கு நாட்டைக் கொண்டு செல்லவில்லை. எனினும், இந்த அரசு நாட்டை வங்குரோத்து அடைய வைத்துள்ளது.

நாட்டை வங்குரோத்து அடைய வைத்த ஆட்சியாளர்களுக்கு என்ன தண்டனை என நீதி அமைச்சரிடம் கேட்க விரும்புகின்றேன்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரால் இன்று வெளியில் தலைகாட்ட முடியவில்லை. நாடாளுமன்றத்துக்கு முன்பாகவும் கிராமம் ஒன்று உருவாகியுள்ளது. எம்மையும், எமது உறவினர்கள் திட்ட ஆரம்பித்துள்ளனர். நாடாளுமன்றத்தில் கதைக்கின்றீர்கள், என்னதான் தீர்வு என அவர்கள் கேட்கின்றனர். இதற்கு என்ன பதிலை வழங்குவது?

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கினால், அப்பணத்தைக் கொள்ளையடிக்க முடியாது என்பதால் தான் ஆட்சியாளர்கள் ஐ.எம்.எப்பை அன்று நாடவில்லை. தற்போது தலைக்கு மேல் வெள்ளம் வந்துள்ள நிலையில்தான் அங்கு சென்றுள்ளனர் - என்றார்.

## நாடளாவிய ரீதியில் எரிபொருளுக்கு மீண்டும் நீண்ட வரிசையில் மக்கள்!

நாடளாவிய ரீதியில் நேற்றும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் நீண்ட வரிசைகளில் மக்கள் காத்துக் கிடந்தனர்.

இதன் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

அத்தோடு பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டும் காணப்பட்டன.

இந்நிலையில் நாட்டில் நீண்டகாலமாக எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மண்ணெண்ணெய்யை பெற்றுக்கொள்வதற்கும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இருப்பினும், இந்திய கடன் உதவியின் கீழ் 40 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் கொழும்பை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழக முதல்வரின் உதவிக்கு பிரதமர் மஹிந்த நன்றி பாராட்டு

கொழும்பு, மே 07

இலங்கை மக்களுக்கு உதவுவதற்கு முன்வந்தமை தொடர்பாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பிரதமரின் கையொப்பத்துடன், தமிழக முதலமைச்சருக்கு வெள்ளிக்கிழமை கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், தமிழக சட்டப் பேரவையில் தாங்கள் கொண்டுவந்த தனித் தீர்மானத்தின்படி, இலங்கையில் தற்போது நிலவிவரும் கடும் பொருளாதார சூழ்நிலையில், கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ள மக்களுக்கு தமிழ்நாட்டிலிருந்து உணவு அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகள் அனுப்பி வைக்கப்படும் என்று அறிவித்துள்ளமை தங்களது நல்லெண்ணத்தை குறித்து நிற்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை, அண்டை நாட்டு பிரச்சினையாகப் பார்க்காது, மனிதாபிமான அடிப்படையில் நோக்கும் தங்களுக்கும் தமிழ்நாடு மாநில அரசுக்கும் இலங்கை மக்கள் சார்பாக நன்றி தெரிவிக்கிறேன் என பிரதமர் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## பாட்டும் நானே?....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அம்மூதாட்டி சென்ற பின்பு நபிகளின் நண்பர்கள் நபிகளைப் பார்த்து, 'நபிகளாரே, எந்த உணவு கிடைத்தாலும் அதனை எங்களோடு பகிர்ந்து உண்ணுகிற நீங்கள் இன்று அந்த மூதாட்டி தந்த சுவைமிகுந்த பழங்களில் ஒன்றைக்கூட எங்களுக்குத் தராமல் தனித்து உண்டதன் காரணம் என்ன?' என்று கேட்டார்களாம்.

அதற்கு நபி அவர்கள், 'நண்பர்களே அந்த மூதாட்டி தந்த பழங்கள் சுவையானவை அல்ல, அவை மிகுந்த புளிப்புடையனவாய் இருந்தன. அந்தப் பழங்களை அந்த மூதாட்டியின் முன்னால் உங்களுக்கு நான் தந்திருந்தால் அதனை உண்டதும் நீங்கள் முகம் சுழித்து அவற்றை உடனே துப்பியிருப்பீர்கள். அப்படி நடந்திருந்தால் அன்போடு பழங்கள் கொண்டுவந்த அந்த அன்னையின் மனம் வாடியிருக்கும். அன்புள்ள அவரது மனம் வாடக்கூடாது என்பதற்காகவே உங்கள் ஒருவர்க்கும் அந்தப் பழங்களைத் தராமல் நான் தனித்து உண்டேன்' என்றாராம்.

இக் கதையைப் படித்து நான் நெகிழ்ந்திருக்கிறேன். எல்லா மதத்து ஞானிகளும் உயர்ந்தவர்களாய்த்தான் இருந்திருக்கிறார்கள். அன்புதான் எல்லா மத ஞானியரதும் அடிப்படையாகவும் இருந்திருக்கிறது. அந்த ஞானியர்களின் பெருமை உணராதவர்களால்தான் உலகம் முழுவதும் மதச்சண்டைகள் விதைக்கப்படுகின்றன. நமது திருமூலர் சொன்ன, 'அன்பே சிவம்' என்ற தொடருக்கு நபிகளாரின் வாழ்க்கையில் நடந்த இந்தக் கதையையே மேற்கோளாய் எடுத்துக் காட்டலாம் என்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'தெய்வம் பலபல சொல்லி பகைத்தீயை வளர்ப்பவர் மூடர்' - பாரதியார்**

# காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் போராட்டத்துக்கும் அரசு மதிப்பளிக்கவேண்டும்

## மனுவல் உதயச்சந்திரா கோரிக்கை

நீதிக்காக போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் போராட்டத்துக்கும் கோரிக்கைகளுக்கும் இலங்கை அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும்.

நாடாளுமன்ற சட்ட மூலத்தின் மூலம் உருவாக்கப்பட்ட காணாமற்போனோர் அலுவலகத்தின் அலுவலகம் வினைத்திறனாக செயற்படவில்லை என்பதை ஆதார பூர்வமாக விளக்கும் வகையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக இந்த விடத்துக்கு குரல் கொடுக்க வேண்டும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் நேற்று (வெள்ளிக்கிழமை) மதியம் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுத்துவரும் போராட்டம் இன்றும் எவ்வித நியாயமான நீதியும் இன்றி தொடர்ந்தவண்ணம் இருக்கின்றது.

நீதிக்காக போராடிய 115 காணாமல் ஆக்கப்பட்டவர்களது பெற்றோர் இறந்துள்ளனர். அவர்களின் சாட்சியங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

இவ்வாறானதொரு நிலையில் எந்த ஓர் அரசாங்கமும் காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகளோடு அக்கறையாக நடந்து கொள்ளவில்லை.

சர்வதேச நாடுகளின் அழுத்தங்களால் உருவாக்கப்பட்ட நிலைமாறு கால நீதியின் அங்கமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகம் வந்த போது பாதிக்கப்பட்ட மக்கள் இலங்கை அரசாங்கத்தின் மேல் நம்பிக்கை இன்மையை வெளிப்படுத்தி இந்த அலுவலகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் அழிக்கவில்லை என்பதை ஆரம்பத்திலிருந்தே தெரிவித்து வந்தனர்.

ஆனால் இந்த அலுவலகத்திலோ அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக பிரதேச செயலகங்களில் வழங்கப்படுகின்ற சான்றிதழால் எவ்வித பயனும் இல்லாத நிலையில் தற்போதை அலுவலகத்தின் முக்கிய பதவியில் உள்ளவர் பதவி விலகலை அறிவித்துள்ளார் என்பதை ஊடகங்கள் வாயிலாக அறிகிறோம். அவ்வாறான பதவியில் உள்ளவர்கள் அலுவலகத்தில் சுதந்திரமாக இயங்க முடியவில்லை எனவும், நீதி அமைச்சின் தலையீடுகள் அதிகம் எனவும், போதிய நிதி ஒதுக்கீடுகளோ பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் அரசாங்கத்திற்கு அர்ப்பணிப்போ இல்லை எனவும் தெரிவித்தார்.

இந்த அலுவலகம் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதையும் செய்ய முடியாதுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டி இருக்கின்றமை அந்த அலுவலகத்தின் உண்மை நிலையை எடுத்துச் சொல்வதாக அமைந்துள்ளது.

இந்த அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை காலமும் ஆமை வேகத்தில் இயங்கி விட்டு சர்வதேசத் திடம் இந்த அலுவலகத்தின் செயற்பாடுகள் திருப்தி அளிப்பதாக அரசாங்கம் தன் வழமையான பொய்யான அறிக்கைகளை சர்வதேசத்திடம் வழங்கி வருகின்றமை, இந்த மக்களின் எதிர்பார்ப்பு மேலும் மழுங்கடிப்பதாகவே உணர்கின்றோம்.



நீதிக்காக போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் போராட்டத்துக்கும் கோரிக்கைகளுக்கும் இலங்கை அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும்.


நாடாளுமன்ற சட்ட மூலகத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மேற்படி அலுவலகம் வினைத்திறனாக செயற்படவில்லை என்பதை ஆதார பூர்வமாக விளக்கும் வகையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக இந்த விடத்துக்குக் குரல் கொடுக்க வேண்டும்.

தற்போது பொருளாதார நெருக்கடியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தங்கள் உரிமைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்த வண்ணமே உள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நியாயமான நீதி கிடைக்கும் வரை நீதிக்கான பயணத்தில் சிவில் சமூக அமைப்புக்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் தொடர்ந்தும் குரல் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# அரச தரப்பில் ஒருவரை பிரதி சபாநாயகருக்கு தெரிந்திருந்தால் பெரும்பான்மை தெரிந்திருக்கும்

## ரணில் தெரிவிப்பு



பிரதி சபாநாயகர் தெரிவில் அரசாங்க தரப்பில் ஒருவரை நியமித்திருந்தால் அரசாங்கத்தின் பெரும்பான்மையை தெரிந்துகொள்ள முடிந்திருக்கும். அத்துடன் எதிர்க்கட்சியில் இருந்து 2 பேர் போட்டியிட்டது விசேட அம்சமாகும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதிய பிரதி சபாநாயகரைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பின் பின்னர் சபையில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரதி சபாநாயகர் வேட்பாளராக அரசாங்கத்தால் ஒருவரை நிறுத்த முடியாமல் போயிருக்கின்றது. எதிர்க்கட்சியில் இருந்தே இரண்டுபேர் போட்டியிட்டனர். எவ்வாறெனினும் போட்டியிட்ட இருவருமே அதற்கு மிகவும் தகுதியானவர்கள்.

ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஏற்கனவே பிரதி சபாநாயகராகச் செயற்பட்டவர். இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின் தந்தையார் இந்த சபையில் சபாநாயகராகப் பதவி வகித்தவர். என்றாலும் அரசாங்க தரப்பினால் ஒருவரை பிரேரித்திருந்தால் அரசாங்கத்துக்கு பெரும்பான்மை இருக்கின்றதா என்பதை பார்த்துக்கொள்ள முடிந்திருக்கும். என்றாலும் தற்போது நாங்கள் பெறுபேறுகளை ஏற்றுக்கொண்டு நாம் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும்.

நாட்டின் நெருக்கடி நிலை உக்கிரமடைந்தது மக்கள் பெரும் துயரங்களை அனுபவித்து வரும் நிலையில் அனைவரும் ஒன்றிணைந்து அதற்கான விரைவான தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும்

தற்போதைய நிலையில் எதற்கு முக்கியத்துவமளிக்க வேண்டும் என்பது தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூடி தீர்மானங்களை மேற்கொண்டு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் பொது ஜன பெரமுனவை அல்ல ராஜபக்ஷவினரையே வீட்டுக்குச் செல்லுமாறு கூறுகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் அனைத்து கட்சிகளும் இணைந்து தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண்பதே முக்கியம். நாடாளுமன்றத்தில் நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுக்காமல் போயிருக்கின்றோம்.

இந்த வாரம் ஒரு தீர்மானம் எடுக்காவிட்டால் நாடாளுமன்றத்தை மக்கள் சுற்றிவளைப்பார்கள். அதனால் தற்போது அவசரமாக எவற்றை செய்ய வேண்டுமோ அதனை முடிந்தளவு மேற்கொள்வோம். – என்றார்.

# ரணிலுக்கு பாதுகாப்பு வழங்குக சபையில் தினேஷ் கோரிக்கை!

முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு பாதுகாப்பு வழங்க தலையிடுமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் சபைத் தலைவர் தினேஷ் குணவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது வீட்டை சுற்றி வளைக்கும் திட்டம் இருப்பதாகவும், அப்படியானால், உரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தமக்கான பாதுகாப்பை வழங்க தலையிடுமாறும் ரணில் விக்ரமசிங்க கோரியதாக அவர் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனவே, சபையில் கூறப்படும் அறிக்கைகள் தொடர்பாக எந்தவொரு அரசியல் கட்சியும் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரையும் மிரட்டுவது ஜனநாயக நடைமுறையல்ல என்றும் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் வாக்கெடுப்பின்போது அரசாங்கத்தின் பக்கம் நின்றதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் நாடாளுமன்றில் தெரிவித்த கருத்து தொடர்பில் தமக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் தெரிவித்தார்.

கொழும்பு 5 ஆவது லேனில் உள்ள அவரது வீட்டை சுற்றி வளைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ‘எதிர்ப்புகளுக்கு நான் பயப்படவில்லை, ஆனால் நாம் அனைவரும் கவனம் செலுத்த வேண்டியது நாடு இன்று எதிர்கொள்ளும் நெருக்கடி’ என்று அவர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம்

## ஹற்றனிலும் நேற்று நடந்தது






ஹற்றன் நகரில் நேற்று (வெள்ளிக்கிழமை) அரசுக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று தனியார் ஆடை தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள், சமூக செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்பட்டது. சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மேற்படி போராட்டகாரார்கள் பேரணியாக ஹற்றன் நகரத்திலிருந்து மல்லியப்பு சந்தி வரை சென்று அங்கு அனைவரும் ஒன்றுகூடி போராட்டத்தை முன்னெடுத்தனர். அதன் பின் மீண்டும் ஹற்றன் நகரத்துக்குள் பேரணியாகச் சென்றனர்.

நேற்றைய பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவு தெரிவித்தும், தற்போது அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றம், தொடர் மின் துண்டிப்பு, எரிபொருள் விலை யேற்றம், டீசல் தட்டுப்பாட்டால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

எதிர்ப்புப் பதாதைகளை காட்சிப்படுத்தியவாறு, கறுப்பு கொடிகளை ஏந்திக்கொண்டு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டகாரார்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

# கல்முனை அஷ்ரப் வைத்தியசாலை முன்றிலில் ஒன்றிணைந்த சுகாதார தொழிற்சங்க போராட்டம்





அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று (வெள்ளிக்கிழமை) நாடளாவிய ரீதியில், ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கி, பல துறைசார் தொழிற்சங்கங்கள் சேவையிலிருந்து விலகத் தீர்மானித்தன.

இதேநேரம், நேற்றைய ஹர்த்தாலுக்கும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் கூட்டுப் போராட்டத்துக்கும் பதில் கிடைக்காவிட்டால் மே 11ஆம் திகதி முதல் அரசாங்கம் வீட்டுக்குச் செல்லும் வரை தொடர் வேலை நிறுத்தமும் தொடர் ஹர்த்தாலும் தொடரும் என தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

ஹர்த்தால் போராட்டத்துக்கு 2 ஆயிரத்துக்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் ஆதரவளித்துள்ளன என தேசியதொழிற்சங்கமத்தியநிலையம்தெரிவித்துள்ளது. இந்த நிலையில், பல பொது, அரை பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் மூடப்பட்டன. பொது போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டதுடன், கடைகள் அடைக்கப்பட்டு சாலைகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டது.

இதன் அங்கமாக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை ஒன்றிணைந்த சுகாதார சேவைகள் தொழிற்சங்கத்தால் வைத்தியசாலைக்கு முன்னால் நேற்று காலை ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்த ஆர்பாட்டத்தின் போது அரசுக்கு எதிரான பல்வேறுகோஷங்களைஎழுப்பியஆர்ப்பாட்டக்காரர்கள் பொறுப்பு தோல்வியடைந்த அரசாங்கத்தையும் சீரழிந்த அரசமைப்பையும் முடிவுக்குக் கொண்டு வந்து நல்ல அரசியல் கலாசாரத்தையும், ஜனநாயகத்தையும் பேணிக்காக்க உண்மையான தேசப்பற்று வேலைத் திட்டத்தை உருவாக்குவதே மக்கள் போராட்டத்தின் நோக்கமாகும் என்றனர்.

அங்கு பின்வரும் விடயங்களுக்கு ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் சட்டரீதியான தீர்வுகள் காணப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

★ தேசிய பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை உறுதிசெய்தல் மற்றும் நாட்டில் அனைவருக்கும் சட்டத்தின் ஆட்சி சமமாக பொருந்தும் சூழலை உருவாக்குதல்.

★அனைத்து மக்களின் வாழ்வுரிமையை உறுதி செய்தல்.

★மக்கள்பிரதிநிதிகள்நியமனத்துக்குத்தேவையான குறைந்தபட்ச தகுதிகளுடன், குறைந்தபட்ச தரத்தை வெளியிடுதல்.

★மக்கள் பிரதிநிதிகளின் சிறப்புச் சலுகைகளை இழந்து அவர்களை பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கு உட்படுத்துதல்.

★மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் அரசியலில் ஈடுபடும் உறுப்பினர்களை தொடர்ச்சியான கணக்காய்வுக்கு உட்படுத்தல்.

★அமைச்சரவை உட்பட அனைத்து மக்கள் பிரதிநிதிகளின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு முறையான வழிமுறையை அறிமுகப்படுத்துதல்.

★தேவையான அளவுக்கு தங்களுக்கு வழங்கிய பொறுப்புக்களைவினைத்திறனுடன்ஆற்றமுடியாதவர்களை அல்லது ஊழல்மிக்க அரசியல்வாதிகளை அகற்றி, அதனால் ஏற்படும் சேதத்தை ஈடுசெய்ய ஒரு குறிப்பிட்ட கொள்கையை வகுக்க வேண்டும்.

★அரசியல் தலையீட்டுடன் பொருளாதாரம் உட்பட நாட்டின் துறைகளுக்கும் நிலையான தேசியக் கொள்கைகளை உருவாக்குதல்.

★அரசியல் தலையீடு இல்லாமல் பொது நிறுவனங்களைப் பராமரித்தல் மற்றும் அனைத்து அரசு அதிகாரிகளும் சுதந்திரமாக நியமிக்கப்படும் முறையை உறுதி செய்தல்.

★உள்ளூர்தொழில்முனைவோருக்குமுன்னுரிமை அளித்தல் .

★அமைதியான போராட்டம் மற்றும் கருத்து வெளிப்படுத்தும் உரிமை உட்பட அடிப்படை ஜனநாயக உரிமைகளை உறுதி செய்தல்.

★இலவசக் கல்வி மற்றும் இலவச சுகாதாரம் , பாதுகாப்பு போன்ற சேவைகள் மற்றும் பொது வளங்களைப் பாதுகாத்தல். – போன்ற விடயங்களை வலியுறுத்தினர்.

## நாட்டு மக்கள் உள்ளாடைகளை தொங்கவிட்டு அரசுக்கு எதிர்ப்பு!





நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், நேற்று (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்றத்திற்கு அருகில் இடம்பெறும் மக்கள் எழுச்சிப் பேராட்டத்தின் மற்றுமொரு வடிவமாக உள்ளாடை பேராட்டம் இடம்பெற்றது.

நாடு தழுவிய ரீதியில் நேற்று ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் நாட்டின் பிரதான நகரங்களின் செயற்பாடுகள் முடங்கிப்போயிருந்தன. இதேவேளை, பல நகரங்களில் எதிர்ப்பு போராட்டங்களும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், வியாழக்கிழமை இரவு நாடாளுமன்றத்துக்கு நுழையும் வீதியில் ஆரம்பிக்கப்பட்ட 'ஹொரு ஹோ கம' பகுதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை முதல் உள்ளாடைகளைத் தொங்கவிட்டு போராட்டம் நடந்தது.

'இதுமட்டுமே மிஞ்சியுள்ளது' என்ற கோங்களோடும், பதாதைகளோடும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆண், பெண்களது உள்ளாடைகள் தொங்கவிடப்பட்டு மக்கள் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

## பாதுகாப்பு அரண்களை தகர்த்து நாடாளுமன்றம் கொளுத்தப்படும்!

### முஜிபுர் ரஹ்மான் ஆரூடம்

இரும்பு வேலிகளால் நாடாளுமன்ற சுற்றுவட்டத்தை முடக்கி, பொலிஸ்,இராணுவ பாதுகாப்புடன் நாடாளுமன்றக் கூட்டத்தொடரை நடத்துவதையிட்டு சபாநாயகர் உட்பட நாடாளுமன்றின் அனைத்து உறுப்பினர்களும் வெட்கப்பட வேண்டும். பாதுகாப்பு அரண்களைத் தகர்த்து நாட்டு மக்கள் என்றாவது நாடாளுமன்றத்தை தீயிடுவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் சபையில் எச்சரித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற கூட்டத்தொடரின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டு மக்களின் கருத்துகளுக்கு நாடாளுமன்றில் மதிப்பளிக்கப்படவில்லை என்ற காரணத்தினாலும், மக்கள் நாடாளுமன்றத்தை முற்றுகையிடுவார்கள் என்ற அச்சத்தாலும் இரும்பு வேலிகளால் நாடாளுமன்றில் நாற்புறங்களும் முடக்கப்பட்டு,பொலிஸ், இராணுவத்தினரது பாதுகாப்புடன் நாடாளுமன்ற நடவடிக்கைகள் இடம்பெறுவதையிட்டு சபாநாயகர் உட்பட 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெட்கப்பட வேண்டும்.

நாட்டு மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் செயற்பட்டால் மக்கள் என்றாவது நாடாளுமன்றத்தை தீயிடுவார்கள். மக்களின் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. ஜனாதிபதி எங்கு உள்ளார் என்று தெரியவில்லை, அவரால் ஜனாதிபதி செயலகத்துக்குக்கூட செல்ல முடியாத நிலையில் உள்ளார்.




மறுபுறம் பிரதமர் எவ்வித விழாக்களுக்கு செல்லவும், அமைச்சர்கள் வீதிக்கும் செல்லவும் முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது இவ்வாறான நிலைமை வேறெங்கும் கிடையாது.

அரசாங்கத்திலிருந்து வெளியேறி நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படுகிறோம் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்களின் உண்மைத் தன்மை தற்போது வெளிப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவை அவலட்சண அமெரிக்கர் என விமர்சித்தவர்கள் தற்போது அவருடன் பேச்சுகளில் ஈடுப்படுகிறார்கள். யார் டீல் அரசியலில் ஈடுபடுகிறார்கள் என்பதை நாட்டு மக்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும். – என்றார்.

## நாடாளுமன்றில் பைத்தியக்காரர் போல் நடந்து கொள்ளாதீர்கள்! – சபாநாயகர்

நாடாளுமன்றத்தில் பைத்தியக்காரர்கள்போல் நடந்துகொள்ள வேண்டாம் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் பூர்வாங்க நடவடிக்கைகள் நேற்று (வெள்ளிக்கிழமை) ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே அவைத் தலைவரின் உத்தரவை நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கத் தொடங்கியபோதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பைத்தியக்காரத்தனமாக நடந்துகொண்டால் சபை ஒத்திவைக்கப்படும் என்றும் சபாநாயகர் கூறினார்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அன்று யாழ் நகரில் நடந்தது என்ன?**

இப்போது ரம்புகனவில் நடந்தது போல் அன்றும் கண்ணீர்ப் புகைக் குண்டோ, தண்ணீரைப் பீச்சியடித்தலோ, ஆகாயத்தில் எச்சரிக்கை வேட்டுக்கள் தீர்த்தலோ இடம்பெறவேயில்லை. பொதுமக்களை நோக்கியே நேரடியாக உயிர் வேட்டுக்கள் – அவை மரணத்தை ஏற்படுத்தும் எனத் தெரிந்திருந்தும் – தீர்க்கப்பட்டன. இருவர் இறந்தனர். பலர் காயமடைந்தனர்.

ஆயுதம் தாங்கி, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைத் தாக்க வந்த கோஷ்டியைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சியிலேயே மரணமும் காயங்களும் ஏற்பட்டன என்பது வழமை போல பொலிஸின் வாதமாக இருந்தது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் நடந்த நீதிபதியின் விசாரணைகளில் பொலிஸார் சம்பவ இடத்தில் கண்டெடுக்கப்பட்டவை எனத் தெரிவித்து இரண்டு துப்பாக்கிகளையும், தடிகள், பொல்லுகள், கத்திகள், வாள்கள் சிலவற்றையும் சமர்ப்பித்து, ஒரு வன்முறைக் கும்பலைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கை எனத் தங்களின் செயற்பாட்டை நியாயப்படுத்தினர். அதற்குமேல் எதுவும் நடைபெறவில்லை. மரணித்தவர்களுக்கும் இது வரை எதுவித நியாயமும் செய்யப்படவில்லை.

சன்சோனி ஆணைக்குழுவுக்கு முன் 1977 கலகங்கள் சார்ந்த சம்பவங்கள் விசாரணைக்கு வந்தபோது தமிழ் அகதிகள் கழக சட்டத்தரணிகளுக்கு கிடைத்த பொலிஸாரின் உள் வீட்டுத் தகவலின் அடிப்படையில் சம்பவத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஆதாரமாக பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இரண்டு துப்பாக்கிகளும் அழைப்பாணை மூலம் பெற்று விசாரிக்கப்பட்டன.

அவை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் ஊழியராக அங்கே குடும்பத்தினரோடு குடியிருந்த திலகர் என்பவருடையது என்பதும், அவை சூட்டுச் சம்பவத்திற்கு முன்னரே அவரிடமிருந்து குருசாமி என்ற பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலேயே இருந்தன என்பதும் தெரிய வந்தன.

பொலிஸார் தங்களது கதையை வலுப்படுத்த இவற்றை எடுத்துச் சென்று போராட்டத்தில் வந்த மக்களின் கைகளில் புகுத்தி தங்கள் கதைகளை நியாயப்படுத்தி இருந்தனர்.

சன்சோனியின் அறிக்கைகளுக்குப் பிறகும் இதில் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகவோ அமிர்தலிங்கத்தைத் தாக்கியவருக்கு எதிராகவோ எந்தவித நடவடிக்கையும் இன்று வரையில் எடுக்கப்படவில்லை.



ஆனால் இப்போது ரம்புக்கன விசாரணைகள் மட்டும் பரபரப்பாக முன்னேறி நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவை இரண்டினதும் தாற்பரியங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். இப்படி அன்றிலிருந்து இன்று வரை நடைபெற்று அவ்வளவு அட்டூழியங்களையும் அடுக்கிக் கொண்டே போகலாம். அவை இந்த ஆக்கத்துக்கு முக்கியமல்ல. அதனால் விட்டு விடுகிறேன்.

ஏன், 1970 ஆம் ஆண்டுகளில் கோலோச்சிய ரத்வத்தையின் சந்ததி தான் இப்போது மந்திரியாக மதுபோதையில் சிறைக்குச் சென்று, துப்பாக்கிமுனையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளை தன் முன் மண்டியிட வைத்து, அவர்களின் உயிர்கள் பறிக்கப்படும் என்று பயமுறுத்த வைத்தது. ஊடகங்கள் பலவாறு அதனைப் பற்றி எழுதின. விசாரணைகள் நடத்த ஒழுங்குகள் செய்கிறோம் எனக் கூறப்பட்டது. அவை தொடர்கின்றன. அவ்வளவுதான். எவ்வளவு காலம் என்பதை ஊகிக்க முடியாது. இப்படியான சிங்களப் பேரினவாதத்தின் அனுபவங்கள் ஊடாகத்தான் தமிழ் மக்கள் தற்சமயம் எதிர்கொள்ளும் அரசியல் நிலையையும் அணுகுதல் வேண்டும்.

**சிங்களப் பேரினவாதம் தோற்றுப்போனதா?**

தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட சிங்களப் பேரினவாதம்தான் நாடு இன்று வந்திருக்கும் வங்குரோத்து நிலைக்கு காரணம் எனத் தமிழ் மக்கள் பெருவாரியாக நம்புகின்றனர். அதற்கு சில பகுதிகளில் உள்ள சிங்கள பரப்புகளிலும் அனுசரணை உண்டு. ஆனால் அது தான் முழுமுதற் காரணம் என்றோ, அதை அனுசரித்து நடந்து கொண்டால் பொருளாதார நெருக்கடிகள் தீர்ந்துவிடும் என்றோ அந்தத் துறை சார்ந்த நிபுணர் குழுவும் புத்திஜீவிகளும் கருதவில்லை. இனப்பிரச்சினையை மூர்க்கப்படுத்தி, சிங்களப் பேரினவாதத்தை அமல்படுத்த எடுத்த எல்லா முயற்சிகளும் பொருளாதாரத்தைப் படிப்படியாக பாதித்தன என்றாலும், கடைப்பிடிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளும், மீளளிக்கப்பட முடியாதவை எனத் தெரிந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட பெருவாரி கடன்களும், ஊழல்களும், அவற்றைப் பற்றிக் கவலை கொள்ளாத தன்மையும், மக்களுக்கு சுகசீவியம் தர எடுக்கப்பட்ட கொள்கைகளும் நடவடிக்கைகளும்தான் இந்த நிலைமைக்கு காரணம் என்பது அவர்களது கருத்து.

ஆதலால், இனப்பிரச்சினையை முக்கியப்படுத்தி ஒரு தீர்வை எட்ட அரசமைப்பில் சில மாற்றங்களைக் கொண்டு வந்துவிட்டால் தற்சமயத்தைய பொருளாதார நெருக்கடி தீர்ந்துவிடும் என்று அவர்கள் கருதுகின்றார்கள். ஆகவே, இனப்பிரச்சினை விவகாரத்தை வைத்து இந்த விடயத்தில் அரசியல் நடத்துவது அபத்தம் எனவும் அவர்கள் நினைக்கிறார்கள்.

சாமர்த்தியமாகப் பேரினவாதத்தை வைத்து அரசியல் செய்த மஹிந்த ராஜபக்ஷ தாங்கள்தான் பிரபாகரனை அழித்தார்கள் என்று வெற்றிக் கொடி நாட்டி, சிங்கள மக்களைக் கவர்ந்து, அவர்களது வாக்குகளிலேயே கோட்டாபய ராஜபக்ஷவை அரியாசனத்தில் அமர்த்தினார்.

நாடு தற்சமயம் எதிர்கொள்வது பொருளாதாரப் பிரச்சினை மட்டுமே, அதைத் தீர்ப்போம் என்று வித்தியாசப்படுத்துகிறார்.

நாடு இருந்த நிலையில் காலிமுகத்திடலுக்கு வந்த மத்திய வர்க்கத்தின் இளைஞர்கள் பேரினவாதத்தைத் தூக்கி எறிய வேண்டும் என்ற கோங்களை, அதை உணர்ந்து மாற்றங்கள் தேவை என்று வரவில்லை. மக்களின் அத்தியாவசிய தேவைகளான எரிபொருள், எரிவாயு, மின்சாரம், உணவு போன்றவற்றின் பற்றாக்குறை, பாதிப்பினால் ஏற்பட்ட கஷ்டங்களை நீக்கி, புதிய திட்டங்களை அமல்படுத்தாத அரசு வெளியேற வேண்டும் என்ற கோங்களுடன் தான் வந்தார்கள். அதைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாவது கட்டமாக, அது Gotta Go Home என்று வளர்ந்தது. அடுத்து இந்த ஆட்சியாளர்களது பாரிய ஊழல்கள்தான் வங்குரோத்து நிலைக்குக் காரணம் என்று தொடங்கி, அவர்கள் அகற்றப்பட வேண்டும் என்றும், பின் அவர்கள் பற்றி விசாரணைகள் நடந்து ஆஸ்திகள் பறிமுதல் செய்யப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்தன.

பின்னர், காலங்காலமாக இருந்த அரசியல்வாதிகள் யாவருமே நாட்டைச் சூறையாடியவர்கள்தான், அவர்களைப் போன்ற எல்லோரும் அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டும், புதிய சிந்தனையோடு புதிய தலைமுறை நாட்டை சீர்திருத்த வேண்டும் என விவகாரம் வளர்ந்தது.

இவை எல்லாவற்றிற்கும் இடை புகுந்த புத்திஜீவிகளும், அரசாங்கச் செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்த சில அரசியல்வாதிகளும் இந் நிலைக்கு காரணம். அவை நாடு பற்றிய ஒரு பொதுத் தளத்திற்கு ஆதாரமாகின. அத்தோடு பேரினவாதிகளின் கையும் இந்த அரசை நீக்க போராட்டக்காரர்களுக்கு புத்திமதி தந்து கொண்டிருந்தது. அவற்றின் ஆதரவுத் தளத்திற்காகவே இனப்பாகுபாடுகள் வளர்க்கப்பட்டதற்கான காரணிகள் பேசப்பட்டன.

தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டு, இனப் பிரச்சினைகளை மறந்து, ஒன்றிணைந்த நாடாகப் புதிய சிந்தனைகளில் முன்னேற வேண்டுமென்ற பாதைகள் தோன்றின.

இவை தோன்றிய சில நாள்களில் தமிழ் மக்களது அரசியல் பிரதிநிதிகள் காலங்காலமாக அவர்கள் ஊதிய இனப் பிரச்சினைகளுக்கான சங்குகளைக் கையிலெடுக்க, புலம்பெயர் தமிழர்களின் பணபலம் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்று கட்டியங்கள் கூற, பேரினவாதிகள் மட்டுமல்லர், சிங்கள தேசமே உஷார் கொண்டு போராட்டக்காரர்களை அறிவுறுத்தியது. அரசை வெளியேற்றும் நோக்கத்திலேயே குறியாக இருங்கள், இனப்பிரச்சினை என்பதெல்லாம் உள்வாங்கப்பட்டால் அவை எதிரிகளுக்கு வசதியாகலாம், எனவே அடக்கி வாசியுங்கள் என்று கட்டுப்படுத்தப்பட்டார்கள். சிங்கள தேசம் சுதந்திரம் அடைந்த நாள்களிலிருந்து இதுவரை இறுதி யுத்தத்தின் மூலம் பெற்றுக்கொண்ட வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும், அரசை நீக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவற்றைச் சீரழித்து விடாதீர்கள் என்பதை உரைத்து, அந்த வட்டத்துக்குள்ளேயே போராட்டம் முன்னேறுகிறது.

அதைப் பேரினவாதி கம்மன்பில 'தமிழ் மக்கள் ஆயுதங்கள் தாங்கி நேரடியாகப் பெறமுடியாதவற்றை பண பலத்தினால் அடைந்துவிட முடியாது' – என்று அறிக்கை தந்தார்.

தான் பதவிக்கு வந்த அதிகார நிலையில் இருந்திருந்தால், ஜனாதிபதி கோட்டாவும் அதனைச் சிங்கள – பௌத்த பேரினவாதிகளின் பிரதிநிதியாக இன்னும் முரட்டுத்தனமாகச் சொல்லியிருப்பார்.

ஆக, பேரினவாதம் தோற்றுப் போகவில்லை. சில நலிவுகளைச் சந்தித்து இருக்கிறது. அதனை எப்படி மேலும் பல வீனமடையச் செய்து, தமிழ் மக்கள் சாணக்கியமாகக் காய்கள் நகர்த்த வேண்டும் என்பதுதான் முக்கியம்.

(வளரும்)

காலைக்கதிர்
Kalaikkathir

# பொலிஸின் அடாவடித்தனம் அம்பலம்; ஆதாரத்தை வெளியிட்ட மாணவர்கள்!

## புதிய வகைக் கண்ணீர்ப் புகைக் குண்டு இறக்குமதி




இலங்கையில் பொலிஸார் ஏனைய நாள்களில் பயன்படுத்தும் கண்ணீர்ப் புகைக் குண்டுக்குப் பதிலாகத் தற்போது புதிய வகைக் குண்டு ஒன்றைப் பயன் படுத்த ஆரம்பித்துள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

ஏனைய நாள்களில் பொலிஸார் பயன்படுத்தும் கண்ணீர்ப் புகைக் குண்டு ஒரு துண்டாகும். அது ஒரு ஒற்றைக் குப்பி எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதனைக் கையால் பிடித்து வீச முடியும்.

எனினும், நேற்று மாலை நாடாளு மன்றவளாகத்துக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது வீசிய கண்ணீர்ப் புகைக் குண்டு 3 துண்டுகளாக உடைந் துள்ளன எனத் தெரியவந்துள்ளது. அது உடைந்து அதில் இருந்து வாயு வெளி யேறுகின்றது.

இது வழமையான கண்ணீர்ப் புகையை விடவும் அதிக வலுவானது. அவ்வாறு பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசும்போது முடிந்தளவு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லு மாறு பல்கலைக்கழக மாணவர்கள் சார் பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் கண் களை உடனடியாகத் தண்ணீரால் கழுவி விட வேண்டும் எனவும் கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளது.

இந்தக் கண்ணீர்ப் புகைக் குண்டு மிக வும் வலுவானது என்பதால் அதிலிருந்து வெளியேறும் குகை நீண்ட நேரம் காற் றில் கலந்திருக்கும்.

ஏற்கனவே பல்கலைக்கழக மாணவர் கள் மீது வீசிய கண்ணீர்ப் புகைக் குண்டு களை அவர்கள் கைகளால் பிடித்து மீண்டும் பொலிஸார் மீது வீசியதால் புதி யவகைகண்ணீர்ப்புகைக்குண்டுகளைப் பொலிஸார் பயன்படுத்துவது தெரிய வந்துள்ளது.

N 500 - CS Gas Hand Grenade (3 PCS) எனப்படும் இந்தப் புதிய வகை கண் ணீர்ப் புகைக் குண்டு கொரியாவில் தயா ரிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்குத் தேவையான அத்தி யாவசியப் பொருட்களான மருந்துகள், எரிபொருட்களை நாட்டுக்குக் கொண்டு வருவதற்குப் பணம் இல்லை என அரசு கூறுகின்ற போதிலும் கண்ணீர்ப் புகைக் குண்டு கொண்டு வருவதற்குப் பணம் உள்ளதா எனப் பல்கலைக்கழக மாண வர்கள் 'பேஸ்புக்' பக்கங்களில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

---

### நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆர்ப்பாட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர் சம்மே ளனத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு முடிவெடுப்பதற்கு கால அவகாசம் வழங்கி இவ்வாறு ஆர்ப் பாட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத் துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்தநாடாளுமன்றக்கூட்டத்தொடர் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாக வுள்ள நிலையில் அதற்குள் அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டும் என பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத் தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

---

### தமிழகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சென்ற இருவரை ஏற்றிச் சென்ற பட கோட்டி ஒருவர் இந்தியாவின் கட்டுப் பாட்டுப் பிரதேசம் எனத் தெரிவித்து நேற்று அதிகாலை இலங்கையின் கட்டுப் பாட்டில் உள்ள 7 ஆவது மணல் திட்டில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

இவ்வாறு இறக்கிவிடப்பட்டவர்களை இந்திய மீனவர்கள் அவதானித்து இந்தி யக் கரையோர காவல்படையினருக்கு தகவல்வழங்கியுள்ளனர். இதனையடுத்து இந்திய எல்லைவரை தேடிய இந்திய அதி காரிகள், அவ்வாறு இந்தியாவின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் எவரும் இல்லை என உறுதி செய்துள்ளனர்.

நேற்று மாலை 4 மணியளவில் இலங்கை கடற்படையினருக்கு கிடைத்த தகவலிற்கமைய சம்பவ இடத்மிற்குச் சென்ற கடற்படையினர் 7 ஆவது மணல் திட்டில் நின்ற ஓர் ஆணையும் ஒரு பெண் ணையும் கைது செய்து தலை மன்னா ருக்கு அழைத்து வந்தனர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எட்டு மணல் திட்டுகளில் இந்தியப் பக்கம் உள்ள மூன்று மணல் திட்டுகளே இந்தியக் கடல் எல்லைக்குள் வருகின்றன.

---

### படைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனதமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தெரிவித்துள்ளார்.

நேற்றுநாடாளுமன்றத்தில்உரையாற் றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கை யில் –


ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானங்க ளால் இந்த நாடு வங்குரோத்து அடைந் துள்ளது. நாட்டை வங்குரோத்து நிலைக் குக் கொண்டு சென்ற குற்றவாளிகளைக் கொண்டு எவ்வாறு ஆட்சி நடத்த முடி யும்? தேர்தல் ஒன்றை நடத்தாமல் அர சாங்கத்தை அமைக்க முடியாது. எனவே அதற்கே முன்னுரிமை அளிக்க வேண் டும். தேர்தலை எவ்வளவு தூரம் பிற்போ டுகின்றீர்களோ அந்த அளவிற்கு நாட் டின் அரசியல் நிலைமை மேலும் மோச மாகும்.

இந்தச் சபையானது மக்களின் விருப் பத்தைப் பிரதிநிதித்துவம் செய்யாத கார ணத்தால் கலவரம் வெடிக்கும் நிலைமை உருவாகும். அதுவே நடைபெறப் போகின்றது. ஜனாதிபதியும் இந்த அர சாங்கமும் அதனை நோக்கியே செல்கின் றனர். தற்போதும் கூட அமைச்சின் செய லாளர்களாகவும் மற்றும் உயர் பதவிக ளுக்கும் இராணுவத்தினரை நியமிப்பதில் ஜனாதிபதி ஆர்வம் காட்டுகின்றார். – என்றார்.

---

# ராஜபக்ஷக்களுடன் 'டீல்' சாணக்கியனுக்குதான்!

## தனக்கல்ல என ரணில் பதிலடி அச்சுறுத்தல் எனவும் விசனம்



கொழும்பு, மே 07

தமிழ்க் கூட்டமைப்பின் இரா. சாணக்கி யன் எம்.பி., நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய உரையால் கடுப்பாகிப் போன ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அதற்கு நேற்று பதி லடி கொடுத்து, சாணக்கியன் மீது சரமா ரியாக சொற்கணைகளைத் தொடுத்தார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியபோது, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி, சாணக்கியனின் உரை குறித்து தமது விளக்கத்தை முன்வைத்தார்.

ராஜபக்ஷக்களுடன் சாணக்கியனுக்கு தான் அரசியல் 'டீல்' இருந்துள்ளது, அவர் ராஜபக்ஷக்களின் கட்சியின் பட்டி யிருப்புத் தொகுதி அமைப்பாளராகவும் செயற்பட்டுள்ளார். – என சுட்டிக்காட்டி, அது தொடர்பான நியமன கடிதத்தை ஆதாரமாக முன்வைத்தார்.

ராஜபக்ஷக்கள் தன்னை வீழ்த்து வதற்கு புலிகளுடன்கூட 'டீல்' வைத்திருந் தனர் என்பதை மீள் நினைவூட்டிய ரணில், சாணக்கியனுக்கு வேண்டுமானால் 'ராஜபக்ஷ புராணம்' கை தேர்ந்த விடய மாக இருக்கலாம் என வசைபாடினார்.

நீங்கள் வேண்டுமானால் மஹிந்த சரணம் கச்சாமி, பஸில் சரணம் கச்சாமி, நாமல் சரணம் கச்சாமி என துதி பாடியி ருக்கலாம், எனவே, என்னையும் அந்த பட்டியலில் இணைந்து விட வேண்டாம். – எனவும் கிண்டல் பாணியில் கோரிக்கை யொன்றை முன்வைத்தார் ரணில் விக்கிரமசிங்க.

பிரதி சபாநாயகர் விவகாரம் குறித்து தான் ஏன் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் பேச்சு நடத்தினார் என்பதற்கான விளக் கத்தையும் அவர் வழங்கினார்.

தமிழக் கூட்டமைப்பும் ஒருவரை நிறுத்த முன்வந்தது. எனவே, எதிரணி களை ஐக்கியப்படுத்ததே நான் முற்பட் டேன். சுமந்திரன், சாணக்கியன், செல் வம், சிறிதரனுடன் பேசியிருந்தேன். – என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை யொன்றை எழுப்பிய சிறிதரன், ரணில் தன்னுடன் பேச்சு நடத்தினார் எனக் கூறு வது அப்பட்டமான பொய் என்றார்.

சித்தார்த்தன் என்பதையே சிறிதரன் எனத் தாம் விளித்து விட்டார் எனக் கூறி ரணில் சமாளித்தார்.

"நாடாளுமன்றத்தில்எனதுசெயற்பாட் டுக்காக சனிக்கிழமை காலை கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் உள்ள ஐந்தாம் ஒழுங்கையில் உள்ள எனது இல்லத் தைச் சுற்றிவளைக்கத் திட்டமிடப்படு வதாகவும், அதற்காக அருகில் உள்ள மகளிர் கல்லூரி முன்றிலில் அணிதிரளு மாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த அழைப்பாளர்களில் ஒருவராக சாணக்கியனும் இருக்கக்கூடும். ஆனால் இந்த அச்சுறுத்தல் அளவு மீறியது" – என்று விசனம் தெரிவித்தார் ரணில் விக்கிரமசிங்க.

---

# குழந்தையைக் கொன்று கிணற்றில் வீசிய தாய்!

சீதுவை – துன்முல்லவத்தை பிரதே சத்தில் 6 மாதப் பெண் குழந்தையைக் கொலை செய்து, கழிவறைக் குழியில் வீசியபெற்றோரைச்சீதுவைப்பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குழந்தையைக் கழுத்து நெரித்துப் படுகொலை செய்த தாயார், சடலத்தைக் கிணற்றில் வீசியுள்ளர்.

மாலையில் கணவர் வீட்டுக்கு வந்து, குழந்தையைப் பற்றி விசாரித்தபோது, குழந்தையைக் கொன்று கிணற்றில் போட்டதாக மனைவி தெரிவித்துள்ளார்.

மனைவியைக் காப்பாற்றுவதற்காகக் கிணற்றிலிருந்து குழந்தையின் சட லத்தை எடுத்த கணவன், அதைக் கழி வறைக் குழியில் வீசியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையின் தாய் மனநலம் பாதிக் கப்பட்டவர் என அடையாளம் காணப்பட் டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.